அரசியல்
www.anjaanenjan.com

# அஞ்சாநெஞ்சன்

நெஞ்சினை பிளந்த போதும் நீதி கேட்க அஞ்சிடோம்...

• அக்டோபர் 2025 • மாத இதழ் • ரூ.20.00 • மலர் : 16 • இதழ் : 10





## தமிழகத்தின் காலை உணவு திட்டம்...

### தெலுங்கானாவிலும் அமல்படுத்த முதல்வர் ரேவந்த் ரெட்டி திட்டம்...




## உதயநிதி பாணியில்.. இன்பநிதி.. சினிமா துறையில் என்ட்ரி..

## கரூர் பெருந்துயரம்



இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
K.C.அறிவழகன்
ஒன்றிய கழக பொறுப்பாளர்,
காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம், சேலம் மத்திய மாவட்டம்.
K.R.பிரபாகரன்
பேரூர் கழக செயலாளர்
காடையாம்பட்டி பேரூர் கழகம்
சேலம் மத்திய மாவட்டம்




இதயம் அறக்கட்டளை
"நல்லதை செய்யும் நல் உள்ளங்கள்"
இதயம் அறக்கட்டளை
இதயம் அறக்கட்டளை
முதலாம் ஆண்டு நிறைவு & தீபாவளி
நல்வாழ்த்துத் தொகுப்பு வழங்கும் விழா
நாள் : 18.10.2025 சனிக்கிழமை இடம் : அரங்கனூர், சாத்தப்பாடி.
நிறுவனர் & தலைவர்
ஒருங்கிணைப்பு திட்ட ஆலோசகர்
பொருளாளர்
துணை பொருளாளர்
R.சரவணன்
S.ரைசல்மாலதி
S.கார்த்திகா
R.சரவணன் ராமதாஸ்

ARASIYAL ANJANENJAN★Tamil Monthly

அரசியல்
# அஞ்சாநெஞ்சன்
மாத இதழ்

அக்டோபர் 2025 ★ மலர் : 16 ★ இதழ் : 10
October 2025 ★ Vol : 16 ★ Issue : 10

வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர்
**ப.அன்பழகன்**

இணை ஆசிரியர்கள்
**நா.பூமாறன்**

செய்தி ஆசிரியர்
சென்னை **கா.தமிழரசு**

துணை ஆசிரியர்கள்
**ஆர்.ராஜாமகேஷ், ப.முருகன்**
**ஹரிஹரன்**

நிர்வாக ஆசிரியர்
**எஸ்.ஜெயபிரகாஷ்**

தலைமை நிருபர் **கோபால்**

நிருபர்கள்
சென்னை **ராஜேந்திரன்**
சென்னை **விஜய், ரவிச்சந்திரபூபதி**
மதுரை **சண்முகசுந்தரம்** நாமக்கல் **பூபாலன்**
திருச்சி **பாலு** செங்கல்பட்டு **தினகரன்**
சென்னை **முத்தையா, ஹேமநாதன்**
திண்டுக்கல் **சுர்ஜித் பெரெரா பக்ருதீன்**
செய்யாறு **சந்துரு** கோவை **செந்தில்**
நீலகிரி **மலையரசன்** தேனி **கௌடில்யன்**
திருப்பூர் **வ.ரங்கநாதன்** பெரம்பலூர் **ஜஹாங்கீர்**
ஈரோடு **எஸ்.அருண்குமார்** சேலம் **ரா.சரவணன்**
தூத்துக்குடி **பன்னீர்செல்வம்** தஞ்சை **மகேஷ்**
ராமநாதபுரம் **ஜெரினாபானு**
சினிமா நிருபர் **அருள்ராஜ்**
தலைமை புகைப்படக் கலைஞர்கள்
**கி.நியாஸ், எம்.ராஜ்குமார்**

சட்ட ஆலோசகர்கள்
**ச.கிருஷ்ணகுமார்,** வழக்கறிஞர்
**பி.காமராஜ்,** வழக்கறிஞர்
**சுதாகர்,** வழக்கறிஞர் **சேனிக் ராஜ்,** வழக்கறிஞர்

**நிர்வாக அலுவலகம்**

எண்.35, வேது குறுக்குத்தெரு,
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 24.
தொடர்புக்கு : 044-2483 7899
Mob.: 9629655333, 9444611497, 8122675008
E-mail : anjaanenjan15@gmail.com
Web : www.anjaanenjan.com
youtube : @ancbreakingnews

# தலையங்கம்...

நேபாளத்தில் ஒரு புதிய வகையான போராட்டம் வெடித்துள்ளது. இந்தப் போராட்டத்தை வழிநடத்துபவர்கள், "Gen Z" என்று அழைக்கப்படும் இளைஞர்கள். ஏன் இந்தப் போராட்டம்? இந்தப் போராட்டத்திற்கான முக்கிய காரணம் "MIC" (Man of the series) என்ற பெயரில் சமூக வலைத்தளங்களில் பரவிய ஒரு ஊழல் கதை.

ஆனால், இது ஒரு சாதாரண ஊழல் புகார் மட்டுமல்ல. இது நேபாள இளைஞர்கள் மத்தியில் நீண்ட காலமாக இருந்த கோபத்தையும், ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. வேலைவாய்ப்பின்மை, ஊழல், அரசின் செயலற்ற தன்மை, மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற நிலை போன்ற பிரச்சனைகள், இந்த இளைஞர்களை ஒன்று சேர்த்துள்ளன.

இந்தப் போராட்டத்தின் தனித்துவமான அம்சம், இது பாரம்பரிய அரசியல் கட்சிகளாலோ அல்லது தலைவர்களாலோ வழிநடத்தப்படவில்லை. இது முழுக்க முழுக்க சமூக வலைத்தளங்கள் வழியாகத் திரட்டப்பட்ட ஒரு தன்னெழுச்சியான இயக்கம். இளைஞர்கள் டிக்டாக், ட்விட்டர், மற்றும் ஃபேஸ்புக் போன்ற தளங்களைப் பயன்படுத்தித் தங்கள் கருத்துக்களையும், கோபத்தையும் வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் அமைதியான முறையில் கூடி, தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துகின்றனர். இந்தப் போராட்டங்களில் அரசியல் கோஷங்களுக்குப் பதிலாக, "No-MIC" (No Man of the series) மற்றும் "No More Corruption" போன்ற கோஷங்கள் ஒலிப்பதைப் பார்க்கலாம்.

நேபாளத்தின் Gen Z இளைஞர்கள், தங்கள் நாட்டில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர உறுதியாக உள்ளனர். அவர்கள் வெறும் குறைகளைச் சொல்வது மட்டுமல்லாமல், ஒரு புதிய நேபாளத்தை உருவாக்கவும் விரும்புகிறார்கள்.

இந்தப் போராட்டம் நேபாளத்தின் அரசியல் மற்றும் சமூக அமைப்பில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.. இது ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்திற்கான தொடக்கமாகவும் உள்ளது. நேபாளத்தின் எதிர்காலம், இந்த இளைஞர்களின் கைகளில் உள்ளது.

**- ஆசிரியர்**

**நடிகரும் தமிழக வெற்றிக் கழக தலைவருமான விஜய் கடந்த 27.09.2025 சனிக்கிழமை அன்று கரூரில் பிரச்சாரத்திற்கு வந்திருந்தார். அப்போது கரூரில் மிக மோசமான ஒரு சம்பவம் நடந்தது. விஜய்யை பார்க்க அளவுக்கு அதிகமாக மக்கள் திரண்டதால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இந்தத் துயரத்தில் 41பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர்.**

தவெக தலைவர் விஜய் சட்டசபை தேர்தலுக்காக ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்து வந்தார். அவருக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் உடன் தான் போலீசார் அனுமதி அளித்து வந்தனர். இருப்பினும், விஜய்யை பார்க்க வரும் ரசிகர்கள் அந்தக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதில்லை என்ற புகார்கள் இருக்கவே செய்தன. இந்நிலையில்தான் விஜய் கரூரில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது திடீரென மக்கள் கூட்டம் அதிகரித்தது. விஜய் பேச்சை முடிக்கும் முன்பே ஒவ்வொருவராக கூட்டத்தில் கீழே மயக்கமுற்று விழ துவங்கிவிட்டார்கள். விஜய்யின் வாகனத்தை சுற்றிலும் அத்தனை பேரும் மயங்கியதுமே பதற்றமும், அசௌகரியமும் சேர்ந்து கொண்டது.



# கரூர் பெருந்துயரம்

பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போதே மயங்கி விழுந்த நபர்களுக்கு, மேலே இருந்தபடியே விஜய், வாட்டர் கேன்களை தூக்கி வீசினார். இதையடுத்து பின்னாலேயே ஆம்புலன்ஸ் வாகனங்கள் வந்து மயங்கியவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இதனால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இவர்களில் ஒன்பது குழந்தைகளும் அடங்குவர். மேலும், 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தமிழ்நாட்டில் சமீபத்தில் நடந்த அரசியல் கூட்டத்தில் வேறு எங்கும் இந்தளவுக்கு மோசமான சம்பவம் நடந்தது இல்லை. இது தொடர்பான வீடியோ பார்த்தாலே நெஞ்சு உலுக்குவதாக இருக்கிறது.

தமிழக முதல்வர் உடனடியாக வெளியிட்ட அறிக்கையில், இந்த துயரகரமான சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா பத்து லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும், மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன். மேலும் இச்சம்பவம் குறித்து முறையான விசாரணை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அளிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் உடனடியாக அமைக்கப்படும் என்றார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பரப்புரை முடிந்த பிறகு எங்கும் நிற்காமல் நேராக தனி விமானத்தில் புறப்பட்டு





சென்னை சென்றடைந்தார். இங்கு மக்கள் 41 பேர் உயிரிழந்திருந்தாலும் விஜய் 3 மணி நேரம் கழித்தே ஆறுதல் ட்வீட்டை போட்டிருந்தார்.

இருந்தபோதிலும் விஜய் கரூரில் இருக்காமல் சென்னை சென்றதை பலரும் விமர்சித்து வந்தனர். இந்த நிலையில் விஜய் கரூருக்கு நேரில் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும், இதற்காக போலீசாரிடம் அனுமதி கேட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள உருக்கமான அறிக்கையில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு ரூ.20 லட்சம் நிதியுதவி வழங்குவதாக தெரிவித்துள்ளார். இந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த வக்கீல் அணியினர் சென்னையில் நீதிபதி தண்டபாணியை சந்தித்து நேரில் முறையிட்டனர்.

கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்தனர். இதனை தொடர்ந்து நீதிபதி தண்டபாணி, "இது தொடர்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யுங்கள்" என்று தெரிவித்தார். இதையடுத்து தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மதுரை உயர்நீதிமன்றத்தில் திங்கட்கிழமை காலை மனுதாக்கல் செய்யப்பட்டது.

இன்றைய கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதில் காவல்துறையின் குளறுபடிகளையும், தவெக மேலிடம் கட்டுப்பாடுகளை அறிவுறுத்தியும் கூட, அவைகளை அலட்சியப்படுத்திய தொண்டர்களையும் ஏற்கவே முடியாது.

விஜய் மட்டுமே ஒருநபர் கட்சியாக செயல்பட்டு வருவதும், தவெகவின் 2ம், 3ம் கட்ட தலைவர்கள் இல்லாததும், இதுபோன்ற குறைகளுக்கு காரணமாகிறது. அன்று விஜயகாந்த்துக்கு பண்ருட்டியார் துணையாக இருந்ததுபோல, இன்று விஜய்க்கு சீனியர்கள் யாரும் இல்லாதது அக்கட்சியின் பலவீனமாகவே உள்ளது. சீனியர்கள் இருந்திருந்தால், முன்கூட்டியே சரியான திட்டமிடலை வழங்கியிருப்பார்கள்.

எப்படிப்பார்த்தாலும், இந்த துயர சம்பவம் தவெக கட்சிக்கு மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. அத்துடன், தேர்தல் வரவுள்ள நிலையில், இந்த மரணங்கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பும் உள்ளது.

அடித்தட்டு மக்களின் வாக்குகளை பெற்று எப்படியாவது ஆட்சியை பிடிக்க நினைப்போர், அந்த மக்களின் பாதுகாப்பு பற்றியும் நலனை பற்றியும் கவலைப்படாமல் எடுக்கும் முடிவுகள்தான், இப்படியான விபரீதங்களை தந்துவிடுகின்றன. இன்றைய விஜய்க்கு பொருந்தும் உண்மையாகும்.

விஜயின் கட்சி வளர்ச்சிக்கு இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் கூட்டணி வைத்தால் மட்டுமே தமிழகத்தில் ஜொலிக்க முடியும் என்ற நிலைதான் உள்ளது. அதைவிடுத்து தனியாக நின்று வெற்றிபெற்று ஆட்சி அமைக்கலாம் என்று நினைத்தால் விஜய்க்கு அது கானல் நீராகவே அமையும். எனவே விஜய் எடுக்கின்ற முடிவு அவரின் அரசியல் எதிகாலத்தை தீர்மானிக்கும். ■





# ரயில் பெட்டியில் தான் கஞ்சா கடத்தி வரப்படுகிறது...

## ... ரயில்வே அதிகாரிகள் தகவல் ...

**பெங்களூரு தென்மேற்கு ரெயில்வே அளித்த தகவலின்படி இந்த ஆண்டின் ஜனவரி முதல் தற்போது வரை, அதாவது கடந்த 9 மாதங்களில் பெங்களூரு, மைசூரு மற்றும் உப்பள்ளி பகுதிகளில் இருந்து ரூ.5.5 கோடி மதிப்பிலான 691 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில் தலைநகர் பெங்களூரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் ரூ.4.5 கோடி மதிப்பிலான கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**

இதில் பெங்களூரு பிரிவில் மொத்தம் 68 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் 3 மாதங்களில் 30 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூ.2 கோடி மதிப்பிலான 277 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக வெளிமாநிலத்தைச் சேர்ந்த 13 கஞ்சா வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மைசூரு பிரிவில் 13 வழக்குகளில் ரூ.26 லட்சம் மதிப்பிலான 30 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு, 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேபோல் உப்பள்ளி பிரிவில் 13 வழக்குகளில் ரூ.66 லட்சம் மதிப்பிலான 68 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் ரெயில்வே போலீசார் நகரின் முக்கியமான ரெயில் நிலையங்களில் பயணிகளின் உடைமைகளை சோதனை செய்து உள்ளே அனுப்புவதால், கடத்தல்காரர்கள் எந்த சோதனை முறையும் இல்லாத சிறிய ரெயில் நிலையங்களை தேர்ந்தெடுத்து அங்கிருந்து கஞ்சாவை கடத்தி கொண்டு செல்கின்றனர்.

ரெயில்வே போலீசார் ரெயிலில் சோதனை நடத்தும்போது கஞ்சாவை வேறு பெட்டியில் வைத்து விட்டு, கடத்தல்காரர்கள் வேறு பெட்டியில் ஏறிக்கொள்கின்றனர். இதனால் அதிக நேரங்களில் கஞ்சா மட்டுமே சிக்குகின்றன. கடத்தல்காரர்கள் சிக்குவது இல்லை என்றும் பீகார், உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம் மற்றும் ஆந்திராவில் இருந்து தான் ரெயில்களில் கஞ்சாவை எளிதில் கொண்டு செல்கின்றனர். அவர்களின் பரிவர்த்தனைகள் அனைத்தும் செல்போன் தொடர்பு மூலம் நடத்தப்படுகின்றன என்று தென்மேற்கு ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ■

# சேலம் இளம்பெண் 70 லட்சம் மோசடி...

**ஐ.ஏ.எஸ். படிக்க உதவக்கோரி பேராசிரியரிடம் ரூ.70 லட்சம் மோசடி செய்த இளம்பெண்ணை போலீசார் கைது செய்தனர். சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியை சேர்ந்தவர் குணாதேவி (வயது 24). இவர் வேலூரில் உள்ள தனியார் கலைக்கல்லூரியில் கடந்த 2018-21ம் ஆண்டில் இளங்கலை ஆங்கிலம் படித்தார்.**

அப்போது அந்தத் துறைத்தலைவரும், பேராசிரியரு மான ரூபேஷ் சதிஷ்குமாரிடம், குணாதேவி கல்லூரி படிப்புக்கு பின்னர் இந்திய ஆட்சிப் பணிக்கு (ஐ.ஏ.எஸ்.) படிக்க உள்ளதாகவும், அதற்கு போதிய வசதி இல்லாததால் நிதியுதவி செய்யும்படியும் கேட்டுள்ளார். அவருக்கு உதவ நினைத்த பேராசிரியர் ரூபேஷ் சந்திரகுமார் முதற்கட்டமாக ரூ.35 ஆயிரம் கொடுத்துள்ளார்.

இந்த நிலையில் கடந்தாண்டு குணாதேவி செல்போனில் ரூபேஷ் சதீஷ்குமாரை மீண்டும் தொடர்பு கொண்டு நான் உத்தரகாண்ட் மாநிலம் முசோரியில் உள்ளேன். தனியார் ஐ.ஏ.எஸ். அகாடமியில் தங்கி பயிற்சி பெற்று வருவதாகவும், தந்தை இறந்துவிட்டதால் பொருளாதார ரீதியாக மிகவும் கஷ்டப்பட்டு வருவதாகவும் கூறி உள்ளார். மேலும் ரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மருத்துவ சிகிச்சைக்காக பல லட்சம் தேவைப்படுவதாகவும், அதற்கு பண உதவி செய்யும்படி கேட்டுள்ளார்.

அதனை உண்மை என நம்பிய பேராசிரியர் ரூபேஷ்சதீஷ் குமார் உடனடியாக ரூ.16 லட்சத்தை அந்த பெண்ணின் வங்கிக்கணக்கிற்கு அனுப்பினார். அதன்பின்னர் அவர் வாட்ஸ்அப் குரூப் ஒன்றை உருவாக்கி தனது நண்பர்கள், குடும்பத்தினர், பேராசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் உள்பட பலரை அதில் இணைத்து மாணவியின் மருத்துவ சிகிச்சை மற்றும் படிப்பிற்கு உதவும்படி அதில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன்பேரில் ஏராளமானோர் பணம் அனுப்பிய வகையில் ரூ.10 லட்சம் வரை சேர்ந்துள்ளது. உடனே ரூ.54 லட்சத்தையும் அந்த பெண்ணின் மருத்துவச் செலவுக்கும், ஐ.ஏ.எஸ். படிப்பதற்காகவும் பேராசிரியர் வங்கி கணக்கிற்கு அனுப்பி உள்ளார்.





பேராசிரியர் மட்டும் குணாதேவிக்கு ரூ.70 லட்சம் கொடுத்துள்ளார். இதுதவிர சமூக வலைதளங்களில் கொடுத்த விளம்பரம், பதிவு மூலம் பலர் ரூ.10 லட்சம் வரை குணதேவியின் வங்கி கணக்கிற்கு செலுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் குணாதேவி கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஐ.ஏ.எஸ். பயிற்சி முடிந்துவிட்டதாக கூறி அவரின் ஐ.டி. கார்டை பேராசிரியரின் செல்போனுக்கு அனுப்பி உள்ளார். அதைக் கண்ட அவருக்கு திடீரென சந்தேகம் ஏற்பட்டது. அந்தப் பெண் செய்த மோசடி அம்பலமானது. இதையடுத்து முசோரியில் உள்ள அந்த ஐ.ஏ.எஸ். அகாடமிக்கு சென்று அவரைப் பற்றி பேராசிரியர் விசாரித்தார். அப்போது குணாதேவி அங்கு பயிற்சி பெறவில்லை என்று தெரிய வந்தது. இதையடுத்து அந்தப் பெண் பல நபர்களிடம் இதே போல் மோசடி செய்துள்ளதும் தெரியவந்தது. இதுகுறித்து ரூபேஷ் சதீஷ்குமார் செல்போனில் அந்த பெண்ணை தொடர்பு கொண்டு கேட்டதற்கு அலட்சியமாக பதில் கூறி உள்ளார். மேலும் அந்த பணத்தை சில மாதங்களில் கொடுத்து விடுவதாக மிரட்டும் தோனியில் பேசி உள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த ரூபேஷ் சதீஷ்குமார் இதுதொடர்பாக வேலூர் மாவட்ட குற்றப்பிரிவில் புகார் அளித்தார். அதன்பேரில் போலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

அதில் குணாதேவி ஐ.ஏ.எஸ். படிப்பதற்காக மற்றும் மருத்துவச் செலவிற்காக கூறி ஏமாற்றி ரூ.80 லட்சம் மோசடி செய்தது உறுதியானது. அதையடுத்து அவரை போலிசார் கைது செய்தனர். மேலும் அவர் இதுபோன்று வேறு யாரிடமும் பணம் பெற்று ஏமாற்றி உள்ளாரா என்று போலிசார் விசாரித்து வருகின்றனர். ■






# அமைச்சர் சொல்லியும் மதிக்காத மேயர்..?

## – கொந்தளித்த கவுன்சிலர்கள்!

**திருச்சி மாநகராட்சி மாமன்ற சாதாரணக்கூட்டம் கடந்த 25 ம் தேதி மேயர் அன்பழகன், ஆணையர் மதுபாலன், துணை மேயர் ஜி.திவ்யா ஆகியோர் முன்னிலையில் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் துணை ஆணையர், நகரப் பொறியாளர், நகர் நல அலுவலர், செயற் பொறியாளர்கள், மாநகராட்சி உதவி ஆணையர், உதவி செயற்பொறியாளார்கள், சுகாதார அலுவலர்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில், மேயர் அன்பழகனுக்கு எதிராக துணை மேயர் திவ்யா தனக்கோடி மண்டல குழு தலைவர் மதிவாணன் உட்பட திமுக கவுன்சிலர்கள் பெரும்பாலானோர் கூட்டத்தை புறக்கணிப்பதாக கூறி வெளிநடப்பு செய்தார்கள்.**

இது சம்பந்தமாக நாம் மண்டல குழு தலைவரும், மாநகர செயலாளருமான மதிவாணனிடம் பேசினோம். சார் அரியமங்கலம் பகுதியில் சுமார் 47 ஏக்கர் பரப்பளவில் மாநகராட்சி குப்பை கிடங்கு பயன்பாட்டில் உள்ளது. இந்த குப்பை கிடங்கினால், அருகில் வசிக்கும் பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளானர்கள். அடிக்கடி மீத்தேன் வாயுவால் தீ விபத்து மற்றும் காற்று மாக ஏற்படுகிறது அதனால் அதை அகற்ற வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். ஏற்கனவே நடந்த மாமன்ற கூட்டத்தில் இனிமேல் குப்பையை கொட்ட வேண்டாம். இருக்கிற குப்பையை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து விட வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அதற்கு மேயரும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து விடுகிறோம். இனிமேல் அங்கு எதுவும் வராது என்றார்.

இந்த நிலையில் தான் சமீபத்தில் நடந்த மாமன்ற கூட்டத்தில் மீன்களுக்கான உணவு உற்பத்தி தொழிற்சாலை வைக்கப்போவதாக மாமன்ற கூட்டத்தில் மேயர் அன்பழகன் சொன்னார். நீங்கள் எதுவுமே வராது என்று சொன்னீர்கள். இப்போது அரியமங்கலம் குப்பை கிடங்கில் மழை பெய்து காம்பவுன்ட் சுவர் உடைந்து மழை நீர் வெளியே செல்கிறது.

இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள். இப்போது இப்படி செய்கிறீர்களே என்று நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம். வெளியிலும் வந்து விட்டோம். தொகுதி எம்.எல்.ஏவும்

பள்ளிகல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யா மொழியும் கூட அதிகாரிகளிடம் கூப்பிட்டு சொல்லிவிட்டார். ஆனால் யாருக்கு டெண்டர் விட்டார்கள் என்றெல்லாம் எங்களுக்கு தெரியாது.

ஆனாலும் அங்கே மீன் உணவு தயாரிக்கும் தொழிற்சாலைக்கு உண்டான பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டே தான் இருந்தது. நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தும் பணிகள் நடந்தது. இந்த நிலையில் தான் தொகுதி மக்கள் எல்லாம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியிடம் போய் சொன்னார்கள். அமைச்சர் மீண்டும் அதிகாரிகளிடம் கூப்பிட்டு பொதுமக்கள் எதிர்ப்பு இருக்கிறது இனிமேல் அந்த வேலைகளை செய்யாதீர்கள் என்றார்.

ஆனால் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சொல்லியும் கேட்காமல் மீண்டும் மீண்டும் பணிகளை செய்ததால் தான் நாங்கள் வெளிநடப்பு செய்தோம் என்றார் மதிவாணன். அவரோடு துணை மேயர் திவ்யா தனக்கோடி, மற்றும் 27 திமுக கவுன்சிலர்கள், 3 காங்கிரஸ் கவுன்சிலர்கள், வி.சி.க கவுன்சிலர் பிரபாகரன், மா.கம்யூனிஸ்ட் கவுன்சிலர் சுரேஷ் உட்பட 35 பேர் வெளிநடப்பு செய்தனர்.

இது சம்பந்தமாக நம்மிடம் பேசிய திமுக பிரமுகர் ஒருவர் சார், 47 ஏக்கர் குப்பை கிடங்கு அதில் பாதியை எடுத்தாச்சு. மீதியை எடுத்து விட்டு வேறு ஏதாவது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரலாம்னு பார்த்தா, கழிவுநீரை சேகரிப்பதற்காக, அமைக்கப்பட்டுள்ள ராட்சச கிணறுகளுக்கும், நாய்களுக்கான கருத்தடை மையத்திற்கு இடையே கோழி கழிவுகளைக் கொண்டு மீன்களுக்கான உணவு உற்பத்தி தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு மேயர் அன்பழகன் தீர்மானம் போடுகிறார்.

மேயர் இதை அந்த தொகுதி அமைச்சரான அன்பில் மகேஷ் பொய்யாமொழியிடம் சொல்லவில்லை. அந்த வார்டு கவுன்சிலர் கார்த்திக்கிடம் சொல்லவில்லை. ஆனால் நான் மாமன்றத்தில் தீர்மானம் வைத்தேன் யாருமே எதிர்ப்பு



தெரிவிக்கவில்லை என்று பேட்டி கொடுக்கிறார். மேயர் சொல்வதே தவறு சார் என்றவர், மாமன்ற கூட்டத்தில் மேயர் தீர்மானம் வைக்கும்போதே, கோட்டத் தலைவரும், மாநகர செயலாளருமான மதிவாணன், அந்த வார்டு கவுன்சிலர் கார்த்திக், கம்யூனிஸ்ட் கவுன்சிலர் சுரேஷ் என்று அந்த பகுதி கவுன்சிலர்கள் எல்லாம் எதிர்ப்பு தெரிவித்தனர். இதை மீறித்தான் மேயர் தீர்மானம் போட்டுள்ளார்.



அதேபோல் மீன் உணவு உற்பத்தி பணிகள் நடப்பது அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு தெரிந்து, அவர் மாநகராட்சி ஆணையரிடம் சொல்லி நிப்பாட்ட சொன்னார். அமைச்சர் நேருவும் அமைச்சர் மகேஷ் பொய்யா மொழிக்கு பிடிக்கலன்னா நிப்பாட்டி வைப்பா என்று சொல்லியிருக்கிறார்.

ஆனால் கடந்த 25 ம் தேதி நடந்த மாமன்ற கூட்டத்தில் கவுன்சிலர்கள் வெளிநடப்பு



பண்ணுகிறவரை மீன் உணவு உற்பத்தி ஆலை பணிகள் நடந்து கொண்டு தான் இருந்தது. அதற்குண்டான வீடியோவும் எங்களிடம் இருக்கிறது. மேயர் இந்த அளவிற்கு இந்த

தொழிற்சாலை வருவதற்கு அக்கறை காட்டியது காரணம் பெரிய அளவில் பணம் விளையாண்டது தான். மேயர் அன்பழகன் அமைச்சர் நேருவின் ஆதரவாளராக இருக்கிறார். யார் சொல்லி மேயர் அன்பழகன் இப்படி பண்ணுகிறார் என்றே தெரியவில்லை அடிக்கடி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை சீண்டிப் பார்க்கும் அளவில் நடந்து கொண்டுள்ளார்.

மேலும் பெரும்பான்மை கவுன்சிலர்கள் மேயர் அன்பழகனுக்கு எதிராக கொந்தளிப்பில் தான் உள்ளனர். இப்படியே போனால் மேயர் அன்பழகன் பதவிக்கு விரைவில் சிக்கல் கண்டிப்பாக வரும் என்றார். அதேபோல் **36**வது வார்டு கவுன்சிலர் கார்த்திகேயனிடம் பேசினோம், சார் மீன் உணவு உற்பத்தி ஆலை சம்பந்தமாக மாமன்றத்தில் சப்ஜெக்ட் வைத்தார்கள். நாங்கள் எதிர்க்கவும், விசாரிக்கிறேன் என்ற மேயர் எங்களை கேட்காமலே ஒப்பந்த பணிகளுக்கு அனுமதி கொடுத்து விட்டார்.

நாங்கள் எதிர்ப்பது தெரிந்ததும் ஒப்பந்ததாரர்கள் இந்த மீன் உணவு ஆலை வருவதால் மக்களுக்கு எந்த பாதிப்பும் வராது என்று என்னிடம் நேரிடையாக சொல்லி சமாதனப்படுத்த முயன்றார்கள். ஆனால் ஏற்கனவே எங்கள் பகுதி மக்கள் குப்பை கிடங்கால் கடுமையாக பாதிக்கப் பட்டிருக்கிறோம். இந்த மீன் உணவு ஆலையால் தூத்துக்குடி மக்கள் படும் துயரங்களை நாங்கள் கண்டிருக்கிறோம் அதனால் நான் மறுத்துவிட்டேன். இருந்தும் அவர்கள் ஆலை சம்பந்த பணிகளை செய்து கொண்டு தான் இருந்தார்கள்.

இப்போது வெளிநடப்பு செய்தபிறகும் எங்கள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அதிகாரிகளிடம் பேசிய பிறகு தான் முடிவுக்கு வந்துள்ளது. அதேபோல் ரோடு வசதி கேட்டும் சிலவற்றை மட்டுமே செய்த மேயர் பல சாலை பணிகளை இன்னும் செய்யவில்லை என்றார் கார்த்திகேயன். அடுத்ததாக வெளிநடப்பில் கலந்து கொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த கவுன்சிலர் பிரபாகரனிடம் பேசினோம். எங்கள் வார்டில் ரெட்டடவாய்க்கால் என்கிற பெரிய வாய்க்கால் ஓடுகிறது அதை தூர் வாரி கட்டி கொடுக்க சொல்லி நானும் முன்றரை வருடங்களாக மேயரிடம் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறேன்.

மேயர் இதுவரை செய்யவில்லை. எல்லா கூட்டங்களிலும் பேசிக்கொண்டு தான் இருக்கிறேன். ஒன்னும் நடக்கவில்லை என்றார் ஆதங்கத்தோடு, நாம் இது சம்பந்தமாக மேயரிடம் பேசினோம். அவர்கள் மந்திரி மகேஷ் பொய்யாமொழி சொல்லியும் கேட்கவில்லை என்பதற்காக எனக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அமைச்சரும் நிறுத்தச்சொல்லி விட்டார். முதல் நாள் பார்ட்டி கூட்டத்தில் எல்லா கவுன்சிலர்களும் நன்றாகத்தான் பேசினார்கள். அவர்கள் சேர்ந்துதான் முடிவு செய்து போனார்கள். வெளிநடப்பு செய்த கவுன்சிலர்கள் என்கிட்ட கேட்டுட்டு விவதாம் பண்ணிட்டு போயிருக்கனும். நான் பதில் சொல்லியிருப்பேன் ஆனால் கேட்காம போயிட்டாங்க.

அவர்கள் எடுத்த சாலை ஒப்பந்தத்தில் சில விசயங்கள் நடந்திருக்கிறது அதை மறைப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட வெளிநடப்பு நாடகம் நடத்துகிறார்கள். நான் இரண்டு முறை துணை மேயராக இருந்திருக்கிறேன் இப்ப மேயராக இருக்கிறேன். இப்போதுள்ள பல கவுன்சிலர்கள் என்னால் தான் உருவானார்கள். அப்படி இருக்கும்போது நான் தப்பு பண்ணுவேனா, நடப்பது நடக்கட்டும் என்றார்.

திருச்சி மாவட்டத்தை பொறுத்தவரை அன்பில் மகேஷ் பொய்யாமொழி கோஷ்டி, அமைச்சர் நேரு கோஷ்டி என்று இரு கோஷ்டிகள் இருக்கிறது. எப்போதுமே அமைச்சர் நேருவின் ஆதரவு கவுன்சிலர்கள் தான் மேயர் அன்பழகனுக்கு எதிராக குடைச்சல் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். இப்போது அமைச்சர் அன்பில்மகேஷ் ஆதரவாளர்கள் மேயர் அன்பழகனுக்கு எதிராக குடைச்சல் கொடுத்தது திருச்சி திமுக வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ■



# உதயநிதி பாணியில்..இன்பநிதி.. சினிமா துறையில் என்ட்ரி..

**முதல்வர் ஸ்டாலினின் பேரனும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் மகனுமான இன்பநிதி ஸ்டாலின் தமிழ் சினிமாவில் தயாரிப்பாளராக என்ட்ரி கொடுக்கிறார். நடிகர் தனுஷ் நடித்துள்ள இட்லி கடை படத்துக்கான தியேட்டர் ரிலீசை ரெட் ஜெயன்ட் நிறுவனம் வாங்கி உள்ளதோடு, அதனை இன்பநிதி பெயரில் வெளியிடுகிறது. இதற்கான அறிவிப்பை நடிகர் தனுஷ் வெளியிட்டுள்ளார்.**

நடிகர் தனுஷ் ஹீரோவாக நடித்துள்ள திரைப்படம் 'இட்லி கடை'. இந்த படத்தில் நித்யா மேனன், அருண் விஜய், பார்த்திபன், ஷாலினி பாண்டே, சமுத்திரகனி, ராஜ்கிரண், இளவரசு உள்பட பலர் நடித்துள்ளனர். இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இந்த திரைப்படம் அக்டோபர் 1ம் தேதி தியேட்டர்களில் ரிலீசாக உள்ளது. இந்த திரைப்படத்தை டான் பிக்சர்ஸ் தயாரிப்பு நிறுவனம் சார்பில் ஆதித்யா பாஸ்கரன் தயாரித்துள்ளார். இதற்கிடையே, 'இட்லி கடை' படத்தின் தியேட்டர் ரிலீசை ரெட் ஜெயன்ட் நிறுவனம் வாங்கி உள்ளது. உதயநிதி ஸ்டாலின் மகன் இன்பநிதி பெயரில் இந்த திரைப்படம் ரிலீஸ் செய்யப்பட உள்ளது. இதற்கான போஸ்டர் அறிவிப்பு வெளியாகி உள்ளது. இதுதொடர்பாக நடிகர் தனுஷ் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில், இட்லிகடை திரைப்படத்தை தமிழ்நாடு முழுவதும் ரெட் ஜெயன்ட் நிறுவனம் வெளியீடு செய்கிறது. புதிய பயணத்தில் அடியெடுத்து வைத்துள்ள இன்ப உதயநிதிக்கு வாழ்த்துகள் என தெரிவித்துள்ளார். மேலும் அவர் போஸ்டரையும் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

முன்னதாக உதயநிதி ஸ்டாலின் சினிமா துறையின் மூலமாக தான் அரசியலுக்குள் நுழைந்தார். ரெட் ஜெயன்ட் நிறுவனம் மூலமாக திரைப்படம் தயாரித்த அவர் நடிகராகவும் வலம் வந்தார். ஒரு கல் ஒரு கண்ணாடி திரைப்படத்தின் மூலமாக ஹீரோவானார். அதன்பிறகு பல திரைப்படங்களில் நடித்தார்.

பிறகு கடந்த 2021 சட்டசபை தேர்தலில் திமுக சார்பில் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டு எம்எல்ஏவானார். அதன்பிறகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் பதவியேற்றார். இப்போது துணை முதல்வராகி உள்ளார். அந்த வகையில் தற்போது உதயநிதி ஸ்டாலின் மகன் இன்பநிதியும் ரெட் ஜெயன்ட் நிறுவனம் மூலமாக சினிமா துறைக்குள் என்ட்ரி கொடுத்துள்ளார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ■

# மாணவன் தற்கொலை விவகாரம்

## குற்றவாளிகளை பாதுகாக்கிறதா ரயில்வே போலீஸ்

**விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மம்சாபுரத்தை சேர்ந்தவர் மாரீஸ்வரன். இவர் திருச்சி அருகே உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு பொறியியல் படித்து வந்தார். புதுக்கோட்டை மாவட்டம் மண்டையூரில் உள்ள ஒரு தனியார் தங்கும் விடுதியில் தங்கி கல்லூரிக்கு சென்று வந்தார். இந்நிலையில் முகநூல், மற்றும் இன்ஸ்டா மூலமாக சிலரின் நட்பு மாரீஸ்வரனுக்கு கிடைத்துள்ளது. அதுவும் ஆண் நண்பர்கள் நட்பு அதிகம் கிடைத்துள்ளது. இதனால் தான் தங்கியிருக்கும் விடுதியில் பெரும்பாலான நேரம் இன்ஸ்டாவிலேயே பொழுதை கழித்திருக்கிறார்.**

இந்த நிலையில் தான் திருச்சி அரியமங்கலத்தை சேர்ந்த பாலிடெக்னிக் மாணவர் இளங்கோவன் என்பவருடன் இன்ஸ்டா மூலமாக மாரீஸ்வரனுக்கு பழக்கம் ஏற்பட்டது. இவரை சந்திக்க மாரீஸ்வரன் அடிக்கடி அரியமங்கலம் சென்று வந்திருக்கிறார். அவர்களுக்குள் தவறான பழக்கமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை அன்று மாலை இளங்கோவனை பார்க்க மாரீஸ்வரன் சென்றுள்ளார். அப்போது இளங்கோவன் தனது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து பாலியல் ரீதியாக மாரீஸ்வரனுக்கு செக்ஸ் டார்ச்சர் கொடுத்துள்ளனர். மேலும் ஏற்கனவே தவறாக எடுத்திருந்த வீடியோக்களை காட்டி மிரட்டி மாரீஸ்வரனிடம் இருந்து பணத்தையும் பிடுங்கியுள்ளனர். அவர் அணிந்திருந்த செயினையும் பறித்துள்ளதாக சொல்லப்படுகிறது. மேலும் நாங்கள் எப்பொழுது கூப்பிட்டாலும் வர வேண்டும் என்று மாரீஸ்வரனை மிரட்டியுள்ளனர். தவறான பழக்கத்தால் தன் வாழ்க்கை இப்படி



**தனது வங்கி கணக்கில் இருந்து பணத்தை பெற்றதோடு, அணிந்திருந்த செயினையும் பறித்ததாக மனவேதனையில் தான் தற்கொலை செய்வதாக நீண்ட கடிதத்தை எழுதியுள்ளார் மாரீஸ்வரன்**

ஆகி விட்டதே மீண்டும் மீண்டும் இவர்கள் பணம் கேட்டு மிரட்டினால் இனி நான் என்ன செய்வது வீட்டில் கேட்டாலும் கொடுக்க மாட்டார்களே என்று பெரும் மன உளைச்சலில் இருந்திருக்கிறான் மாரீஸ்வரன்.

இந்த நிலையில் கடந்த அன்று இரவு மாரீஸ்வரன் மண்டையூர் அருகே ரயில்வே தண்டவாளத்தில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துக்கொண்டார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர் திருச்சி ரயில்வே போலீசார் மாரீஸ்வரன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதற்கிடையில் மாரீஸ்வரன் தங்கியிருந்த அறையில் போலீசார் சோதனை நடத்தினர். அதில், அவர் ஒரு நோட்டில் எழுதி வைத்திருந்த உருக்கமான கடிதம் சிக்கியது. அந்த கடிதத்தில் தனக்கு பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்தவர்கள் பற்றிய விபரங்களையும், அவர்கள் என்ன மாதிரியான தொல்லை கொடுத்தார்கள் என்பதை பற்றியும், தனது வங்கி கணக்கில் இருந்து பணத்தை பெற்றதோடு, அணிந்திருந்த செயினையும் பறித்ததாக மனவேதனையில் தான் தற்கொலை செய்வதாக நீண்ட கடிதத்தை எழுதிய மாரீஸ்வரன் அதில் தன் கையெழுத்து மற்றும் கைரேகை வைத்து, அரியமங்கலம் போய் வந்த பேருந்து பயண சீட்டு மற்றும் தனது செல்போன் பாஸ்வேர்டையும் எழுதி அதனை படம் எடுத்து சமூக வலைதளங்களில் பகிர்ந்துவிட்டு தான் ரயில் முன் பாய்ந்து மாரீஸ்வரன் தற்கொலை செய்து கொண்டதாக போலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

இதைத்தொடர்ந்து அந்த நோட்டு மற்றும் அவரது செல்போனை கைப்பற்றி போலீசார் விசாரணை நடத்தினர். இதுதொடர்பாக மாணவர் இளங்கோவன் (20), அவரது நண்பர்கள் பாண்டீஸ்வரன், பவித்ரன்(20), முத்துராஜா (21), ஆண்டனி சஞ்சய்(22) ஆகிய 5 பேரை ரயில்வே போலீசார் ஞாயிற்றுக்கிழமை அன்று கைது செய்தனர்.

நாம் இது சம்பந்தமாக ரயில்வே போலிஸ் அதிகாரிகளிடம் பேசினோம் சார் இன்ஸ்டா மூலமாக தான் அவர்களுக்குள் பழக்கம் ஏற்பட்டுள்ளது. மாரீஸ்வரனிடம் மட்டும் தான் தவறான பழகத்தை வைத்துள்ளனர். வேறு எந்த தொடர்பும் அவர்களுக்கு இல்லை. குற்றவாளிகள் ஐந்து பேருமே நன்றாக படித்தவர்கள் அவர்கள் இதற்கு முன்பு வேறு எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபட்டதில்லை என்றவர்களிடம் அவர்கள் புகைப்பட்த்தை ஏன் இன்னும் நீங்கள் வெளியிடவில்லை என்றோம்.

சார் எங்கள் மேல் அதிகாரிகள் தான் பிடிபட்ட ஐந்து பேரும் இளைஞர்கள் என்பதாலும் அவர்கள் எதிர்காலம் கருதி தான் புகைப்படத்தை வெளியிடவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். மேலும் இன்னும் அந்த ஐந்து பேரிடம் விசாரணையும் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்றார்கள்.

இந்த நிலையில் நாம் மேலும் விசாரித்தபோது அரியமங்கலம் என்றாலே குற்ற செயல்கள் அதிகம் நடக்கும் பகுதி என்பது அனைவருக்கும் தெரியும். அப்படி இருக்க ரயில்வே போலீசார் எதையோ மறைப்பதற்காகவோ, அல்லது ஆதாயம் பெறும் பொருட்டோ தான் 5 குற்றவாளிகளின் புகைப்படங்களை கூட வெளியே விடமால் பாதுகாக்கிறார்களோ என்று என்ன தோன்றுகிறது. ஆகையால் இந்த விசாரணையை ரயில்வே போலீசாரை விட்டு விசாரணை செய்யாமல், குற்றப்பிரிவு போலீசாரை வைத்து விசாரணை செய்தால் பல மர்மங்கள் வெளிச்சத்துக்கு வரும் என்பதே உண்மை. ■



# கூட்ட நெரிசலில் சிக்கிக்கொண்டால் உயிர் தப்பிப்பது எப்படி?

## செய்ய வேண்டியதும்...! செய்யக்கூடாததும்...!!

**இந்தியா மாதிரி மக்கள் தொகை அதிகம் இருக்கும் தேசத்தில் எப்போதும், எங்கும் கூட்ட நெரிசல் உருவாக வாய்ப்பு உண்டு. அது ரசிகர்கள் கூடும் தியேட்டர், பக்தர்கள் கூடும் கோவில், திருவிழாக்கள், அரசியல் கூட்டம், பொதுப் போக்குவரத்து, விளையாட்டு மைதானங்கள், பொது நிகழ்ச்சிகள் ரோடு ஷோக்கள் எங்கு வேண்டுமானாலும் நடக்கக்கூடியது.**

ஆனால், கூட்டம் கட்டுக்கடங்காமல் போகும் அந்த ஒரு கணத்தில், வாழ்வுக்கும் சாவுக்கும் நடுவே ஒரு மெல்லிய கோட்டில் நாமே நின்றுவிடுவோம். அப்போ என்ன செய்யணும் என்று 99% மக்களுக்கும் தெரியாது. ஏனெனில் இதை நம் பள்ளிப் பாடத்திட்டமும் கல்லூரிப் பாடத்திட்டமும் சொல்லித் தரவில்லை. இன்னும் சொல்லித் தருவதில்லை.

அதனால், நம் உயிர் பிழைக்க தெரிந்து கொள்ள வேண்டிய சில குறிப்புகளை தெரிந்துகொள்வோம். மனதில் வைத்து கொள்ளுங்கள். நான்கு பேருக்காவது சொல்லிக் கொடுங்கள். உயிர் பிழைக்க 10 முக்கிய குறிப்புகள் :

1. **நெரிசலின் அடையாளம்:** ஒரு சதுர மீட்டருக்கு (அதாவது ஒரு டைனிங் டேபிள் அளவு) நான்கு பேருக்கு மேல் நின்றாலே அது அபாயம். வெப்பம் அதிகரித்து, ஆக்சிஜன் குறையும். மூச்சுத் திணறல், மயக்கம், உயிரிழப்பு ஏற்படும் அபாயம் மிக அதிகம்.

2. *Boxer Position:* கூட்டத்தில் செல்லும்போது, கைகளை முன் நீட்டி (*Boxer* மாதிரி) நிக்கவும். இது உங்கள் முன்னால் ஒரு *Air Pocket* உருவாக்கும். அதனால் சுவாசிக்க சுலபமாகும்.

3. **பதற வேண்டாம்:** கூட்டம் திடீரென்று நகர ஆரம்பித்தால், பதற்றப்படாதீர்கள். கத்திக் கொண்டு ஆற்றலை வீணாக்க வேண்டாம். அமைதியாக இருங்கள்.

4. **கூட்டத்தின் திசையில் நகருங்கள்:** கூட்டம் எந்த திசை போகிறதோ, அதே திசையில் தான் நீங்கள் நகர வேண்டும். எதிர்த்து நின்றால் நிலை தடுமாறி கீழே விழ வாய்ப்பு அதிகம்.



5. **<u>கீழே விழுந்த பொருட்களை மறந்துவிடுங்கள்:</u>** கைப்பேசி, சாவி, பணப்பை எதுவாக இருந்தாலும் எடுக்க முயலாதீர்கள். குனிந்தால் கீழே விழும் அபாயம்.

6. **<u>தற்செயலாக விழுந்தால்:</u>** உடனே சுருண்டு பந்து போன்று (*Curl Ball position*) தலை, நெஞ்சு பாதுகாக்கும் விதமாக இருங்கள். பெரும்பாலான மரணங்கள் நுரையீரல் நசிவால் தான் நடக்கின்றன.

7. **<u>ஆதரவு பிடியுங்கள்:</u>** சுவர், கம்பி, தூண் போன்றவை இருந்தால் பிடித்துக் கொள்ளுங்கள். கீழே விழாமல் தற்காத்துக் கொள்ளலாம்.

8. **<u>விளிம்பில் நின்றால் பாதுகாப்பு:</u>** கூட்டத்தின் நடுவில் சிக்கிக் கொள்ளாமல், ஓரமாக இருந்தால் சிறிதளவு பாதுகாப்பு கிடைக்கும்.

9. **<u>பொருட்கள் சுமந்துச் செல்ல வேண்டாம்:</u>** துப்பட்டா, பேக், கனமான சுமைகள் கூட்டத்தில் ஆபத்தை அதிகரிக்கும். சிக்கிக் கொண்டால் உயிருக்கு ஆபத்து.

10. **<u>சிந்தித்து செல்லுங்கள்:</u>** பண்டிகை, திருவிழா, கூட்டம் எல்லாம் மீண்டும் வரும். ஆனால் உயிர் ஒரே முறை தான். இது அவசியமா? என்று உங்களிடம் கேட்டுக் கொண்டு செல்லுங்கள்.

11. **<u>முதலுதவி:</u>** மயங்கியவரை வெளியில் கொண்டு சென்று, காற்றோட்டம் உள்ள இடத்தில் படுக்க வைக்கவும். தண்ணீர் தெளித்து, கால்களை சற்றே உயர்த்தினால் உதவும்.

12. **<u>குழந்தைகள் & பெண்கள்:</u>** குழந்தைகளை கூட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டாம். பெண்கள் தளர்வான ஆடைகள், நீண்ட துப்பட்டா தவிர்க்க வேண்டும்.

13. **<u>*Entry/Exit* மனதில் கொள்ளுங்கள்:</u>** எந்த இடத்துக்கும் செல்லும் முன் நுழைவு, வெளியேறும் வழிகளை கவனத்தில் கொள்ளுங்கள்.

14. **<u>மொபைல் & *Earphones* தவிர்க்கவும்:</u>** கூட்டத்தில் பேசுதல், படம் எடுப்பது, *Earphone* போடுவது கவனம் சிதறச் செய்யும்.

**<u>கடைசி சிந்தனை:</u>** திருவிழா மீண்டும் வரும். ஆலயங்கள் அங்கேயே இருக்கும். அரசியல்வாதிகளின் பேச்சும், சினிமா நடிகர்களின் நிகழ்ச்சியும் நாளை மீண்டும் பார்க்கலாம். ஆனால், சென்ற உயிரை? நம்ம பாசத்திற்குரியவர்களை? மீண்டும் பார்க்க முடியுமா?

அளவுக்கு அதிகமான கூட்டமுள்ள இடங்களுக்கு அவசியம் செல்லவேண்டுமா என்பதை சிந்தித்து முடிவு செய்யுங்கள். கொண்டாட்டங்கள் முக்கியம், ஆனால் நம் உயிர் அதைவிட முக்கியம். ■



# சினிமா Cine




வேதா மீடியா என்டர்டெய்ன்மென்ட் நிறுவனத்தின் தயாரிப்பில், பத்மா கந்தசாமி எஸ்டேட் நிறுவனம் வழங்கும் ஆர் .தங்கமணி இயக்கத்தில் உருவான 'பேராண்டி' எனும் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொல். திருமாவளவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு படத்தின் இசையை வெளியிட்டார். இயக்குநர் ஆர்.தங்கமணி இயக்கத்தில் உருவாகியுள்ள 'பேராண்டி' எனும் திரைப்படத்தில் லதா, கராத்தே ராஜா, 'பவர் ஸ்டார்' சீனிவாசன், அறிமுக நடிகர் அரவிந்தராஜ், லலிதா, ஓசூர் டோனி உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். டி.மகிபாலன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு ஹித்தேஷ் முருகவேல் இசையமைத்திருக்கிறார்.

ஃபேமிலி என்டர்டெய்னராக தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை வேதா மீடியா என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் தயாரித்திருக்கிறது. இந்நிகழ்வில் படக் குழுவினருடன் தொல்.திருமாவளவன், பத்மா கந்தசாமி எஸ்டேட்ஸ் நிறுவனர் ராஜேஷ், தொழிலதிபர் ராமச்சந்திரன், வழக்கறிஞர் உமா சங்கரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இயக்குநர் ஆர்.தங்கமணி பேசுகையில், " இந்தக் கதையை முதலில் மனோரமாவிடம் தான் சொன்னேன். அவர்கள் கதையை முழுவதுமாக கேட்டுவிட்டு நடிக்கிறேன் என்று சொன்னார்கள். அவர்களின் உடல்நல குறைவு காரணமாக இந்த படத்தில் நடிக்க இயலாத நிலை உருவானது. அதன் பிறகு இந்த கதாபாத்திரத்தில் யார் பொருத்தமாக இருப்பார் என்று யோசிக்கும்போது லதா மேடம் நினைவுக்கு வந்தார்கள்.

அதன் பிறகு அவர்களை சந்தித்து இந்த கதையை சொன்னேன். கதையை கேட்டுவிட்டு மனோரமாவை போல் என்னால் நடிக்க முடியாது. நான் என்னுடைய ஸ்டைலில் நடிக்கலாமா? என கேட்டார். அவர்களுடைய வீட்டிலேயே போட்டோ சூட் நடத்தினோம். பேராண்டி முழுக்க முழுக்க கிராமிய கதை. குடும்பத்துடன் அமர்ந்து பார்க்கக்கூடிய கதை. ஒரு பேரனுக்கும், பாட்டிக்கும் இடையே உள்ள பாசத்தை சொல்லும் படம்.

அந்தப் பேரனுக்கு ஒரு பெரிய இடத்து பெண் மீது காதல் வந்து விடுகிறது. அந்த காதலுக்கு எதிர்ப்பும் வருகிறது. அந்த காதலை அந்தப் பாட்டி எப்படி

# நியூஸ்... News



சமாளிக்கிறார்கள்? தன்னுடைய பேரனை ஆளாக்கி அவன் காதலித்த பெண்ணையே திருமணம் செய்து வைக்கிறாரா? இல்லையா? என்பதுதான் இப்படத்தின் கதை.

நடிகை லதா பேசுகையில், " இந்தப் படத்தை தற்போது பார்க்கும் போது பிரமிப்பாக இருக்கிறது. பாடல்கள் சிறப்பாக இருக்கிறது. படமும் தமிழ் கலாச்சாரத்தை சொல்வது போல் இருக்கிறது. தற்போது வெளிவரும் பாடல்களில் கருத்துகளே இருப்பதில்லை. 50 ஆண்டுகளுக்கு முன்பு வந்த பாடல்களில் கூட.. பாடல் வரிகளில் இனிமை இருக்கிறது. தற்போதைய பாடல்களில் இசைக்கருவிகளின் ஆதிக்கம் தான் அதிகம் இருக்கிறது. இந்தக் கால இளைய தலைமுறையினருக்கு பிடிக்கிறது என உருவாக்குகிறார்கள். இதை தவறு என்று நாம் சொல்ல முடியாது. ஆனால் இந்தப் படத்தை இயக்குநர் அற்புதமாக இயக்கியிருக்கிறார்.

தொல்.திருமாவளவன் பேசுகையில், " இப்போதெல்லாம் திரைப்படங்களுக்கு வைக்கும் பெயர்கள் எல்லாம் வித்தியாசமாக இருக்கின்றன. லதா மேடம் குறிப்பிட்டதை போல் இன்றைய 2k கிட்ஸ்களுக்கு பாடல்களும், படத்தின் பெயரும் ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பதால்.. வித்தியாசமான... கவர்ச்சிகரமான.. பெயரை தான் வைக்கிறார்கள். ஆனால் இயக்குநர் தங்கமணி துணிந்து நம்முடைய தமிழ் மரபை போற்றும் வகையில் ஒரு நல்ல தமிழ் பெயரை - குடும்பப் பெயரை திரைப்படத்திற்கு சூட்டியிருக்கிறார்கள். இதுவே அவருடைய துணிச்சலுக்கு சிறந்த சான்று என நான் கருதுகிறேன். பேராண்டி என்று சொல்லும் போதே தாத்தா அல்லது பாட்டி ஆகியோர் இதில் முக்கியமான பங்கு வகிக்க கூடும் என நமக்கு தெரிய வருகிறது. தற்போது வெளியாகும் திரைப்படங்களில் ஏராளமான அரசியல் நெடி உண்டு. சில படங்களில் சாதி பெருமிதம் உண்டு. சில படங்களில் சாதி ஒழிப்பு அரசியலை பேச வேண்டிய .. அந்த கருத்தியல் போக்கை நாம் பார்க்கிறோம்.

இன்றைய சூழலுக்கு ஏற்ப காதல் கதையாக இருந்தாலும்... குடும்ப கதையாக இருந்தாலும்... இந்த காலத்து இளைஞர்களுக்கு ஏற்ப பெயர் சூட்டுவதில் இயக்குநர்கள் கவனமாக இருக்கிறார்கள். லதா மேடம் இந்த படத்தில் நடித்திருப்பதால்.. இந்த பெயரை இயக்குநர் தேர்வு செய்திருக்கிறார் என நான் நினைக்கிறேன். என்று தொல்.திருமாவளவன் பேசினார். ■






# தரமற்ற முறையில் அங்கன்வாடி மையம்... சித்தாமூர் பொதுமக்கள் போஸ்டர் ஒட்டியதால் பரபரப்பு...!

**செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் ஒன்றியத்திற்குட்பட்ட இரும்புலி ஊராட்சியில் அனைத்து கிராம ஊராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ17.25 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் கட்டப்பட்டு வருகிறது.**

இந்த அங்கன்வாடி மையம் தரமற்ற முறையில் கட்டடப்பட்டு வருவதாக அப்பகுதி பொது மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், சித்தாமூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் மனு கொடுத்ததில் எந்தவித நட வடிக்கையும் மேற்கொள்ளாமல் மீண்டும் இந்த அங்கன் வாடி கட்டிடம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதாக தெரிகிறது.

இதைக் கண்டிக்கும் வகையில் அப்பகுதி பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து அரசு அதிகாரிகள் ஒப்பந்ததாரருக்கு துணை போகாதே! சித்தாமூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மீது நடவடிக்கை எடு! என போஸ்டர் அடித்து ஒட்டி உள்ளனர். அந்த போஸ்டரில், தமிழக அரசே! மாவட்ட நிர்வாகமே!! அரசு அதிகாரிகள் ஒப்பந்ததாருக்கு துணைபோகாதே! துணைபோகாதே! ! சித்தாமூர் வட்டார வளர்ச்சி (சி.ஊ) அலுவலர் மீது நடவடிக்கை எடு! சித்தாமூர் ஒன்றிய பொறியாளர் (ம) மேற்பார்வையாளர் மீது நடவடிக்கை எடு! புதிய அங்கன்வாடி மையத்தை தரமாக கட்டாத ஒப்பந்தகாரர் மீது நடவடிக்கை எடு! ஊராட்சி பணிகளை கண்டுகொள்ளாத ஊராட்சி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடு! உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய போஸ்டர்களை பொதுமக்கள் பல்வேறு பொது இடங்களில் ஒட்டி ஊர் பொதுமக்கள் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

மேலும், தரமற்ற முறையில் கட்டப்பட்டு வரும் புதிய அங்கன்வாடி மையத்தின் தரம் குறித்து அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். அதே போன்று ஒப்பந்ததாரர் கட்டிய ஊராட்சி அலுவலகம் மற்றும் அப்ப குதியில் பல்வேறு கட்டிடங்கள் கட்டியுள்ளார். அதையும் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ■

**தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள சில்வார்பட்டி கிராமத்தில் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள இந்த பள்ளியில் 1200க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.**

இந்நிலையில் இரவு நேரத்தில் பள்ளியின் கேட்டை திறந்து சரக்கு வாகனம் மற்றும் டூவீலரில் சில நபர்கள் உள்ளே சென்றுள்ளனர். இதைப் பார்த்த அப்பகுதி பள்ளி மாணவர்கள் பின் தொடர்ந்து சென்று மறைந்திருந்து பார்த்தபோது மாணவர்களுக்கு வழங்க வைத்திருந்த புத்தகங்கள் அறையைத் திறந்து கட்டுக் கட்டாக புத்தகங்கள் மற்றும் நோட்டுகளை சரக்கு வாகனத்தில் ஏற்றியுள்ளனர்.

இதைப் பார்த்த அப்பள்ளி மாணவர்கள் மறைந்திருந்து செல்போன் மூலம் வீடியோ எடுத்துள்ளனர். பள்ளியில் இருந்த பாட புத்தகங்கள் மற்றும் நோட்டுக்களை ஏற்றிய பின்பு அந்த சரக்கு வாகனம் மற்றும் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் அங்கிருந்து சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து வீடியோ எடுத்த பள்ளி மாணவர்கள் பள்ளியின் இரவு காவலரிடம் எதற்காக இரவு நேரத்தில் அரசு பள்ளியில் இருந்த புத்தகங்களை எடுத்துச் செல்கிறார்கள் என கேள்வி எழுப்பி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களே ஆட்களை வைத்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கக்கூடிய நோட்டுப் புத்தகங்களை இரவு நேரங்களில் திருடி சென்றுள்ளனர் என அப்பகுதி பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கூறி வருகின்றனர். அரசு பள்ளியில் இரவுநேரத்தில் பாட புத்தகங்கள் மற்றும் நோட்டுகளை எடுத்துச் சென்ற வீடியோ வாட்ஸ்அப் உள்ளிட்ட வலைதளங்களில் வைரலாக பரவிவரும் நிலையில் இச்சம்பவம் குறித்து காவல்துறையினர் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்தனர்.

பின்பு தேவையானப்பட்டி காவல் நிலையத்தில் கல்வித்துறை சார்பில் புகார் அளித்து காவல் துறையினர் விசாரணை செய்து வருகின்றனர். வீடியோவில் உள்ளது ஆசிரியர் பாரதிராஜா, அப்பள்ளியின் உதவியாளர் விஜயன் என தெரியவந்துள்ளது. ■

# அரசு பள்ளி பாட புத்தகங்களை இரவில் கடத்திய நபர்கள்...

## மறைந்திருந்து வீடியோ எடுத்த மாணவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டனர்!!!





# தமிழகத்தின் காலை உணவு திட்டம்...

## தெலுங்கானாவிலும் அமல்படுத்த முதல்வர் ரேவந்த் ரெட்டி திட்டம்...

**தமிழக அரசின் திட்டங்கள் தனக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இருப்பதாகக் கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி பேசியுள்ளார். குறிப்பாகக் காலை உணவுத் திட்டம் தன்னை மிகவும் கவிந்துள்ளதாகக் கூறிய அவர், அடுத்த கல்வியாண்டு முதல் இந்தத் திட்டத்தை தெலுங்கானாவிலும் அமல்படுத்தப் போவதாக அவர் கூறியுள்ளார்.**

தமிழ்நாடு அரசு சார்பில் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் பேசிய தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, தமிழ்நாடு அரசு கொண்டு வந்த திட்டங்களைப் பாராட்டிப் பேசினார்.

காமராஜர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தைப் பின்பற்றியே தென்மாநிலங்கள் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததாகக் கூறினார். மேலும், காலை உணவுத் திட்டத்தை தெலுங்கானாவில் அமல்படுத்தப் போகிறோம் என அறிவித்த ரேவந்த் ரெட்டி, அடுத்த கல்வியாண்டு இந்தத் திட்டம் தெலுங்கானாவில் அமல்படுத்தப்படும் என்பதையும் அறிவித்தார். அவர் மேலும் பேசுகையில், "கல்வி, விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக இருக்கிறது. தமிழ்நாட்டின் கல்வி மாடல் மற்ற மாநிலங்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இருக்கிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தமிழ்ப் புதல்வன், புதுமைப் பெண், நான் முதல்வன், மற்றும் பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டம் (விடியல் பயணத் திட்டம்) ஆகியவை சிறப்பானவை. நாடு முழுவதும் இத்திட்டங்களைப் பின்பற்ற வேண்டும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மிகவும் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உணவளிக்கிறது. அது நிஜமாகவே எனது மனதைத் தொட்ட ஒரு திட்டமாக இருக்கிறது. கூலி வேலை செய்து



குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்களுக்கு இது பெரிதும் உதவும். அடுத்த கல்வியாண்டில் இத்திட்டத்தை தெலங்கானா அரசு அறிமுகப்படுத்த உள்ளது என்பதை அறிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு மிக சிறந்த முதலமைச்சர் கிடைத்திருப்பதால், தமிழ்நாட்டு மக்கள் அதிர்ஷ்டசாலிகள்" என்று ரேவந்த் ரெட்டி பாராட்டியுள்ளார்.

1991ஆம் ஆண்டு தாராளமயமாக்கலுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் உற்பத்தி வளர்ச்சி மற்றும் தெலுங்கானாவின் தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சி ஆகியவை தான் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டதாக ரேவந்த் ரெட்டி கூறினார். மேலும், சென்னை - ஹைதராபாத் காரிடார் ஒரு முக்கிய தொழில் மற்றும் அறிவு மையமாக மாறியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூக நீதிக் கொள்கைகளில் தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா இடையே ஒற்றுமைகள் இருப்பதாகக் குறிப்பிட்ட ரேவந்த் ரெட்டி, இதில் மறைந்த முதலமைச்சர் மு. கருணாநிதியிடமிருந்து உத்வேகம் பெற்றதாகத் தெரிவித்தார். மேலும், தெலுங்கானாவில் விரைவில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், உள்ளாட்சித் தேர்தல்களில் ஓபிசி பிரிவினருக்கு 42% இடஒதுக்கீட்டையும், SC/ST பிரிவினருக்கு 27% இடஒதுக்கீட்டையும் அமல்படுத்த உள்ளதாக அவர் அறிவித்தார்.

கல்வியில் முதலீடு செய்வது என்பது வெறுமன சேவை இல்லை. அது நீதி மற்றும் உரிமை என்ற தமிழ்நாட்டின் கொள்கையை தெலுங்கானாவும் நம்புவதாக அவர் கூறினார். ■



# கோபுர கலசத்தில் தானியம் நிரப்புவது ஏன்..?

நெல், கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சோளம், மக்காசோளம், சாமை, எள் ஆகியவை கோபுர கலசத்தில் இருக்கும். குறிப்பாக தானியம் அதிகமாக இருக்கும். காரணம் என்னவென்றால் 'வரகு' மின்னலை தாங்கும் அதீத ஆற்றலை பெற்றது என அந்த காலத்திலேயே அறிந்து வைத்துள்ளார்கள். இந்த நுட்பம் மிகவும் சரியான விஷயம் என இப்போதுள்ள அறிவியல் கூறுகிறது.

இயற்கை சீற்றத்தினால் விவசாயங்கள் அழிந்து போனாலும். மீண்டும் விவசாயம் செய்ய தானியங்களை கோபுர கலசத்திலிருந்து எடுத்து பயன்படுத்தலாம். இந்த தானியங்களின் திறன் 12 வருடங்கள் வரை தாக்கு பிடிக்கக்கூடியது.

அதற்கு பிறகு தானியங்கள் தன் சக்தியை இழந்துவிடும் என்பதால் பனிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது. ■









# அமெரிக்காவுக்கே... இந்தியாவின் செக்...!

**கடந்த சில நாட்களாகவே அமெரிக்க வெள்ளை மாளிகை 24 மணி நேரமும் பரபரப்பாக உள்ளது. பெண்டகன் இரவு முழுவதும் விழித்திருக்க, நாஸா நடுநடுங்கிப் போயுள்ளது. அமெரிக்க உளவுத் துறை வெளாட்டாக இன்றி அலார்ட்டாக உள்ளது. எந்நேரமும் எதுவும் நடக்கலாம் போன்ற பீதி. இதற்கெல்லாம் காரணம் யார் தெரியுமா!**

கடந்த வாரம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கண்ணை காட்டி சுந்தர் பிச்சையை விட்டு டிரம்புக்கு எச்சரிக்கை விடுத்தார் அல்லவா, ஜெய்சங்கர் கண்ணைக் காட்டுவதற்கு முன்பு ஒரு வீரதீரச் செயல் நடந்தது தெரிய வந்துள்ளது. அது அங்கிருந்த சிசிடிவி காமிரா மூலம் பதிவாகி தற்போது வெளியாகியுள்ளது.

ஒரு அமெரிக்க குடிமகனாக இருந்தாலும் நான் இந்தியாவின் மகன் என்று நிரூபித்த சுந்தர் பிச்சையின் நாட்டுப் பற்று நம்மை மெய் சிலிர்க்க வைத்தது. இப்படி மெய் சிலிர்த்த பலரில் கொஞ்சம் கூடுதலாக சிலிர்த்த குழு ஒன்று இருக்கிறது. அதற்கு 'ஜெய்கிஷன் மாளவ்யா' எனும் உத்திர பிரதேசத்து சாமியார் தலைவராவார். இந்தச் சாமியார் ஒரு வேத விஞ்ஞானி, அறிவியல் சாஸ்திரி, பல கலைகள் அறிந்த பண்டிட், யாகங்கள் பல நடத்தும் யோகி.

அவரது சீரிய ஆலோசனைகளை ஏற்கனவே பல முறை நாம் கடைபிடித்துள்ளோம். சரியாக 9 மணிக்கு 9 கிரகங்களும் நேர்கோட்டில் வரும் என்னும் கோட்பாட்டை கண்டறிந்தவர் இவரே. மேகங்களுக்குள் பறந்தால் ராடாரில் தெரியாது, திருநள்ளாற்றில் சாட்டிலைட்டை நிலை நிறுத்த முடியாது, மயில் கண்ணீரில் இருந்து மயில் குட்டி போடும், பசும் பாலில் தங்கம் உள்ளது, கோமியத்தால் கேன்சர் குணமாகும் போன்ற பற்பல அரிய வேத விஞ்ஞானக் கருத்துகளை சொன்னவர் இவரே.

இந்த மடச் சாமியாரின் மடம் மதுராவில் கிருஷ்ணர் கோவில் ஒன்றிலுள்ள கோ சாலையில் அமைந்துள்ளது. உலகப் பொருளாதார மாநாட்டில் சுந்தர் பிச்சை டிரம்ப்பின் கண்ணில் விரலை விட்டு ஆட்டியதை அறிந்து ஜெய்கிஷன் ஒரு நாள்

முழுதும் மெய் சிலிர்த்தார். அப்போது அவருக்கு கோகுலத்தில் மண்ணை அள்ளித் தின்ற கண்ணனை வாய் திறக்கச் சொல்லி யசோதை கேட்டதும், திறந்த வாய்க்குள் இந்த உலகத்திலுள்ள அத்தனையையும் காட்டினான் என்பது நினைவுக்கு வந்தது.

ஆம்! இருந்த இடத்திலிருந்து உலகில் உள்ள அத்தனையையும் முதன் முதலில் காட்டியவன் 'கோகுல்' இன்று உலகிலுள்ள அத்தனையையும் காட்டுவது 'கூகுள்'. ஹே கிருஷ்ணா' கோகுல் தான் கூகுளா என்று திரும்ப, திரும்ப ஜெய்கிஷன் மெய் சிலிர்க்க ஆரம்பித்தார். அமெரிக்க கூகுளுக்கு போட்டியாக இந்தியாவில் நாம் கோகுல் எனும் நிறுவனத்தை துவங்கும் முடிவை அப்போதே எடுத்தார். அன்று அஷ்டமி தினம் வேறு. எல்லாரும் அடடா.. இன்னிக்கு அஷ்டமி தினம் ஆச்சே என்று பின் வாங்க..

அட மூடர்களே.! நம் கோகுலக் கண்ணன் பிறந்ததே ஒரு அஷ்டமி தினத்தில் தானே என்று கேட்டு எல்லாரது பின்னையும் இவர் மீண்டும் வாங்கிக் கொண்டார். திட்டம் இது தான், இந்தியாவில் நாம் கோகுல் நிறுவனத்தை துவங்க வேண்டும். அதற்கு சுந்தர் பிச்சையையே தலைவராக்கி அடுத்த 2026 ஆவணிக்குள் அமெரிக்க பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் தள்ள வேண்டும். அப்போது உலகில் இந்தியப் பொருளாதாரம் 'விஸ்வரூபம்' எடுக்காவிட்டாலும் ஓரளவிற்கு 'விக்ரம்' மாவது எடுக்கும் என்று நல்ல நாள் குறித்து தந்துள்ளார்.

இதற்கான வேலைகள் துவங்கி விறுவிறுவென நடக்கிறது. 'சுந்தர் பிச்சை' பெயரிலுள்ள பிச்சைக்கு பதிலாக குபேரன் என்று சேர்த்து அவரை 'சுந்தர் குபேரன்' ஆக்கலாம் என்றும் திட்டமிட்டுள்ளார். இன்று கூகுளின் அதிகப் பயனாளர்கள் உள்ள உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆகவே இனி நாம் கூகுளுக்கு அமெரிக்காவை நம்பி இருக்க வேண்டாம். இந்தியாவின் கோகுல் போதும். வேண்டுமென்றே இந்தத் தகவலை இந்தியா இஸ்ரேலிய மொசாட்டிடம் கசிய விட வழக்கம் போல அவர்கள் அதை



அமெரிக்காவுக்கு சொல்ல மொத்த அமெரிக்காவும் கலகலத்து போய் இருக்கிறதாம்.

டிரம்ப் கடும் காண்டாகி ஆத்திரத்தின் உச்சியில் நிற்கிறாராம். அவர் அங்கிருந்து தவறி கீழே விழுந்துவிடாமல் பாதுகாக்க 'இந்தியாவோடு மோதாதீர்கள்' என டிரம்புக்கு உலகமே அட்வைஸ் செய்து வருகிறதாம். இந்தியாவில் கோகுல் மட்டும் துவங்கி விட்டால் இந்தியா வைதேகி காத்திருந்தாள் போல காத்து நில்லாமல் ஒரே ஆண்டில் வல்லரசு ஆகிவிடுமாம். இதனால் தான் டிரம்ப் டுபுக்கறுந்த வராகம் போல அலறிக் கதறுகிறார்.

அன்று அமைச்சர் ஜெய்சங்கர் சுந்தர் பிச்சைக்கு கண் காட்டும் முன்பு அவரது கையிலிருந்த மொபைலில் ஜெய்சங்கருக்கு கண்ணைக் காட்டியவர் ஒரு பிதாமகர்!! இது தான் அந்த சிசிடிவியில் பதிவாகிய காட்சியாகும். ஏன் டிரம்ப் அலறுகிறார் இப்போது புரிகிறது அல்வா.

இப்படி பல்வேறு துறைகளில் இந்திய முன்னேறுவதை அமெரிக்கா விரும்பவில்லை. ஆகையால், இதையெல்லாம் மறைத்து விட்டு ரஷியாவில் கச்சா என்னை வாங்கினால் 100 % வரி என்று கூறி நமது இந்திய பொருட்களுக்கு வரி போட்டுள்ளார் டிரம்ப். இதையெல்லாம் எதிர்கொள்ளும் விதமாக இந்தியா பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

எனவே, வரும் காலங்களில் இனி இந்தியாவிடம் எந்த ஒரு நாடும் போட்டிக்கே வர யோசிப்பார்கள். நமது நாட்டின் பொருளாதாரம் வெகுவிரைவில் சிறப்பான ஒரு முன்னேற்றத்தை காணும் என்பதில் துளியும் சந்தேகமில்லை. ■




# கோவை அதிகாரிகளின் அத்துமீறல்

## அரசு பணம் கோவிந்தா... கோவிந்தா...

**இந்தியாவின் முக்கிய மாநகராட்சியாகவும் தமிழகத்தின் இரண்டாவது பெரிய மாநகராட்சியாகவும் இருந்து வருகிறது கோவை மாநகராட்சி. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக மிக வேகமாக வளர்ந்து வரும் கோவை மாநகராட்சியின் வளர்ச்சி திட்டங்களுக்காக தமிழக அரசு பெரும் நிதியினை வழங்கி வருகிறது.**

அந்த நிதியில் பெரும் தொகையானது ஊழல்வாதிகளாலும். முறைகேட்டு அதிகாரிகளாலும் கபளீகரம் செய்யப்பட்டு வருகிறதை கண்கூடாக காண்கிறோம். நலத்திட்டங்களின் முழுப் பலனும் பொது மக்களுக்கு சரிவர சென்று சேருவதே இல்லை. மேலும் அதிகப்படியான சொத்து வரி உயர்வு, குடி தண்ணீர் கட்டண உயர்வு, மின்சார கட்டண உயர்வு என்று பொதுமக்கள் பெரிதும் அல்லல் பட்டு வருகின்றனர்.

இந்த வரி மற்றும் கட்டண உயர்வுகளைத் வாங்கிக்கொண்டு மக்கள் செலுத்தும் வரிப்பணத்தை பல வகையிலும் வழிகளிலும் முறைகேடு செய்து தங்கள் வாழ்வை வளமாக்கி வருகின்றனர் கோவை மாநகராட்சியில் அதிகாரிகள். இது போல நடந்தி வரும் பல முறைகேடுகள் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் கோவை மாநகராட்சி சார்பில் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கலையரங்க மேல் மாடியில் ICCC என்னும் பெயரில் கோவை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் என்னும் பெயரில் ஒரு மையம் தொடங்கப்பட்டது.

அதன் நோக்கம் கோவை மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பணிகளை விரைவாகவும் அதிகாரிகளை ஒருங்கிணைத்து பணிகளை திறம்படவும் செய்ய ஆலோசனைகள் மற்றும் உத்தரவுகளை பிறப்பித்து அதை செவ்வனே செய்ய வேண்டி ஆரம்பிக்கப்பட்ட மையமாகும். 2 ஆண்டுக்கு முன்னர் இருந்த ஆணையரால் தொடங்கப்பட்ட இந்த மையத்தை

தற்போதைய கோவை மாநகராட்சி ஆணையர் மிக சிறப்பாக நடத்த தொடங்கினார்.

ஆரம்பத்தில் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களால் நடத்தப்பட்டு வந்த ICCCயானது நாட்கள் செல்ல செல்ல முறைகேடுகளின் புகலிடமாக மாறத் தொடங்கி வருகிறது. துவக்கத்தில் வாரம் 3 முறை அல்லது 4 முறை கோவை மாநகராட்சியின் அத்தனை அதிகாரிகளையும் வைத்து கூட்டம் நடைபெற்று வந்தது. இந்த கூட்டத்தில் அதிகாரிகள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டி உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. நல்லது நடக்கும் இடத்தில் சில முறைகேடு அதிகாரிகளால் கெட்டதும் நடக்கத் தொடங்கும் அல்லவா. அதுபோல வரி வசூல் மற்றும் கோவை மாநகராட்சி வாகனங்கள் செல்வதை கண்காணிக்கும் (G P S ) பணிகளுக்கு தனியார் ஆட்களை ஒப்பந்தம் போட்டு வரவழைத்து அவர்களிடம் இந்த பணிகளை ஒப்படைக்கத் தொடங்கினார்.

இதிலிருந்து தான் முறைகேடு தொடங்கியுள்ளது. அனுபவமில்லாத இந்த பணியாளர்களைக் கொண்டு டிரோன் சர்வே என்ற பெயரில் மெகா குளறுபடியை ஆரம்பித்து பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை சம்பாதித்தது கோவை மாநகராட்சி. உதாரணமாக 10க்கு 10 ரூம் உள்ள வீட்டிற்கு லட்ச ரூபாய் வரி போட்ட சம்பவமும் இந்த டிரோன் சர்வேயில் நடந்தது. இரு ஒரு உதாரணம்தான். இது போல பல இடங்களிலும் குளறுபடி நடந்தது.

இதற்கு காரணம் அனுபவமில்லாத ஒப்பந்த ஊழியர்களை கொண்டு பணி செய்தது தான். அனுபவமுள்ள கோவை மாநகராட்சி வரி வசூலர்கள் செய்யும் தவறுகளை ஈட்டிக்காட்டி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து திறம்பட அவர்களை வழி நடத்தி வரி வசூல் செய்யும் பணிகளை தொடந்திருந்தால் இந்த குளறுபடி நடந்திருக்காது. மேலும் இந்த ஒப்பந்த ஊழியர்களுக்கும், கோவை மாநகராட்சி ஊழியர்களுக்கும் சரியானதொரு ஒருங்கிணைப்பு இல்லை என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

மேலும் ICCC யில் கம்யூட்டர் ஆப்பரேட்டர் எனும் பணிக்கு ஆட்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்துள்ளனர். அவர்களுக்கு 1 வார ஊதியம் எவ்வளவு என்று கேட்டால் தலை சுற்றிவிடும். கோவை மாநகராட்சி ICCC மையத்தில் மீட்டிங் என்ற பெயரில் வாரம் 3 நாட்கள் கூட்டம் நடப்பதால் அன்றைய நாள் முழுவதும் ICCC மையத்தில் மாநகராட்சி அதிகாரிகள் இருக்க நேரிடுகிறது.

இதனால் அலுவலகப்பணியும் பாதிக்கிறது. அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களும் அதிகாரிகள் இல்லாததால் பாதிப்படைகின்றனர். இது குறித்து பெயர் குறிப்பிட விரும்பாத கோவை மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறுகையில்: ICCC யில் மீட்டிங் என்று அடிக்கடி அழைக்கிறார்கள் அங்கே அனைவர் முன்னிலையிலும் எங்கள் பணிகள் குறித்து கடுமையான கண்டிக்கிறார்கள். இது எங்களுக்கு மிகவும் வருத்தமாக உள்ளது.

எங்கள் பணிகளில் தவறு நடந்தாலோ இல்லை சரிவர செய்யவில்லை என்றாலோ தனியாக அழைத்து கண்டிக்கலாம், இல்லை துறை ரீதியாக கடும் நடவடிக்கை எடுக்கலாம். அதை விடுத்து பொது வெளியில் வசை பாடும் போது பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகிறோம். மேலும் பல அதிகாரிகள் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிக்கிறோம். ஒரு சில முறைகேடு அதிகாரிகள் செய்யும் தவருக்கு நாங்கள் அனைவரும் பலிகடாவாக இருநது வருகிறோம். உதாரணத்திற்கு 26/7/24 முதல் 3/8/24 வரை 9 நாட்கள் சம்பளமாக 40 பேருக்கு 3,42,449 ரூபாய் என்ற அடிப்படையில் கொடுத்துள்ளனர்.

அதாவது 9 நாளைக்கு 40 பேருக்கு சம்பளம் மூன்றரை லட்ச ரூபாய். இப்படி மக்கள் வரிப்பணம் முறைகேடாக யாருக்கோ வாரி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த ICCC-க்கு தனியார் ஆட்களை ஒப்பந்த அடிப்படையில் அனுப்பும் நிறுவனத்தின்

பெயர் ரிலைன்ஸ் குளோபால் கிரீன் என்பதாகும். கடந்த 2 வருடங்களாக இந்த நிறுவனத்தின் மூலமாகத்தான் ஒப்பந்த பணிக்காக ஆட்களை எடுத்து வருகின்றனர். இந்த நிறுவனத்திற்க்கு கோவை மாநகராட்சி மூலம் கொடுக்கப்பட்டுள்ள தொகைகளை கண்டால் நமக்கு தலை சுற்றுகிறது.

காபி, டீ செலவு மட்டும் 13 லட்ச ரூபாய். கோவை மாநகராட்சியின் அங்கமாக கலையரங்கில் செயல்பட்டு வரும் ICCC மையத்தில் காபி, டீ குடித்த வகையில் கடந்த 6 மாதத்தில் மட்டும் 13 லட்ச ரூபாய் கொடுத்துள்ளார்கள். இதில் அன்னபூர்ணா ஓட்டலில் இருந்து வாங்கப்பட்ட பில் செலவு மட்டும் 4 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் எனவும் ராயல் கேட்டரிங் சர்வீஸ் எனப்படும் நிறுவனம் மூலம் வாங்கப்பட்ட டீ, காபிக்கு கொடுக்கப்பட்ட தொகை 8 லட்சத்து 92 ஆயிரத்து 958 ரூபாய்.

இதில் குறிப்பிடத்தக்க கொடுமை என்னவென்றால் சுதந்திர தினத்தன்று 40 பேருக்கு ஆன டீ, காபி செலவு 95 ஆயிரத்து 790 ரூபாய். இவையெல்லாம் வெறும் 6 மாதத்திற்கான தொகை மட்டுமே. 2 1/2 ஆண்டுகளில் டீ, காபிக்காக எவ்வளவு தொகை செலவிட்டிருப்பார்கள் என்று நீங்களே பார்த்து கொள்ளுங்கள்.

இந்த நிறுவனத்திற்க்கு கடந்த 6 மாதமாக கோவை மாநகராட்சி மூலமாக கொடுக்கப்பட்ட தொகையினை பாருங்கள்.

ICCC யில் 40 கம்யூட்டர் ஆப்பரேட்டர்கள் என்ன பணி செய்தார்கள் என்பது பற்றியும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஊதியமும் தேதி வாரியாக: 1. 24/7/24 அன்று SSWM வாகனங்களை கண் காணிக்கும் பணிக்காக 40 கம்யூட்டர் ஆபரேட்டர்களுக்கான ஊதியம் 55 லட்சத்து 93 ஆயிரத்து 330 ரூபாய். 2. 5/10/24 அன்று கம்யூட்டர் ஆபரேட்டர்களுக்கு கொடுக்கப்பட்ட ஊதியம் 3 லட்சத்து 42 ஆயிரத்து 449 ரூபாய். 3. 19/10/24 அன்று மீண்டும் கம்யூட்டர் ஆபரேட்டர்களுக்கு கொடுக்கப்பட்ட ஊதியம் 10 லட்சத்து 65 ஆயிரத்து 396 ரூபாய். 4. 19/10/24 அன்று மீண்டும் இதே பணிக்காக கொடுக்கப்பட்ட ஊதியம் 9 லட்சத்து 51 ஆயிரத்து 247 ரூபாய்.

5. 30/11/24 அன்று மீண்டும் இதே பணிக்காக கொடுக்கப்பட்ட ஊதியம் 11 லட்சத்து 41 ஆயிரத்து 496 ரூபாய். 6. 28/12/24 அன்று மீண்டும் இதே பணிக்காக கொடுக்கப்பட்ட ஊதியம் 23 லட்சத்து 4 ஆயிரத்து 871 ரூபாய். 7. 6/2/25 அன்று மீண்டும் இதே பணிக்காக கொடுக்கப்பட்ட ஊதியம் 20 லட்சத்து 92 ஆயிரத்து 743 ரூபாய். 8. 8/2/25 அன்று மீண்டும் இதே பணிக்காக கொடுக்கப்பட்ட ஊதியம் 11 லட்சத்து 79 ஆயிரத்து 546 ரூபாய். 9. 22/4/25 அன்று மீண்டும் இதே பணிக்காக கொடுக்கப்பட்ட ஊதியம் 34 லட்சத்து 24 ஆயிரத்து 488 ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

10. 4/6/25 அன்று மீண்டும் இதே பணிக்காக கொடுக்கப்பட்ட ஊதியம் 14 லட்சத்து 26 ஆயிரத்து 870 ரூபாய். 11. 4/7/25 அன்று மீண்டும் இதே பணிக்காக கொடுக்கப்பட்ட ஊதியம் 14 லட்சத்து 74 ஆயிரத்து 433 ரூபாய்.

என்று பட்டியல் நீடு கொண்டே செல்கிறது. மாநகராட்சியில் அதிகாரிகளின் அத்துமீறலால் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தி வருகின்றனர். இதையெல்லாம் கவனிக்காமல் விட்டால் 2026 தேர்தலில் கோவை மக்கள் எதிர்வினையான முடிவை எடுப்பார்கள் என்பதில் துளியும் அய்யமில்லை. ■

**“கோவை மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பணிகளை விரைவாகவும் அதிகாரிகளை ஒருங்கிணைத்து பணிகளை திறம்படவும் செய்ய ஆலோசனைகள் மற்றும் உத்தரவுகளை பிறப்பித்து அதை செவ்வனே செய்ய வேண்டி ஆரம்பிக்கப்பட்ட மையமாகும்.”**




## மதுரை மாநகராட்சி மேயர் வரி முறைகேடு

# கணவர் மீது நடவடிக்கை...!

**மதுரை மாநகராட்சியில் ரூ.150 கோடி வரி முறைகேடு விவகாரத்தில் மேயர் இந்திராணியின் கணவர் பொன்வசந்த் கைது செய்யப்பட்டுள்ளார். ஏற்கனவே இந்த வழக்கில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சென்னையில் பொன்வசந்தை போலீஸார் கைது செய்துள்ளனர். அவரை மதுரைக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொள்ள போலீஸார் திட்டமிட்டுள்ளனர்.**

*மதுரை மாநகராட்சியில் 150 கோடி ரூபாய் சொத்து வரி முறைகேடு நடைபெற்றுள்ளது கடும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இதையடுத்து, 5 மண்டலங்களைத் தலைவர்கள், 2 நிலைக்குழுத் தலைவர்கள் முதல்வர் ஸ்டாலின் உத்தரவின்பேரில் தங்களது பதவியை ராஜினாமா செய்தனர். இந்த வழக்கில் இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்த முறைகேடு விவகாரத்தை மதுரை டி.ஐ.ஜி. அபினவ் குமார் தலைமையிலான குழு விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், மேயர் இந்திராணியின் கணவர் பொன் வசந்த்தை சென்னையில் வைத்து காவல் துறையினர் கைது செய்துள்ளனர். விசாரணைக்காக போலீஸார் பொன் வசந்தை மதுரை அழைத்து சென்றனர்.*

*அதேபோல, தூத்துக்குடி உதவி ஆணையர் சுரேஷ்குமாரும் போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். முறைகேடு நடைபெற்ற காலகட்டத்தில் இவர்*



உதவி ஆணையர் சுரேஷ்குமார்

மதுரையில் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. இதைத்தொடர்ந்து, சுரேஷ்குமாரையும் போலீசார் மதுரைக்கு விசாரணைக்காக அழைத்து வருகின்றனர்.

அவரிடம் விசாரணை நடத்துவதற்காக மதுரை மத்திய குற்றப்பிரிவு காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கு முன்பாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துவரப்பட்டு பரிசோதனை நடத்தப்பட்டது. அதிக இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு அதிகம் மற்றும் இசிஜியில் மாறுதலாக உள்ளதாக மருத்துவர்கள் பரிந்துரைத்த நிலையில் அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மதுரை மேயர் இந்திராணி பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என திமுக தலைமை உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஏற்கனவே இந்த விவகாரத்தில் திமுகவின் மண்டல குழு தலைவர்கள் அனைவரையும் ராஜினாமா செய்ய உத்தரவிட்டது திமுக தலைமை. அப்போதே மேயர் இந்திராணியும் ராஜினாமா செய்யக்கூடும் என செய்திகள் வெளியாகி இருந்தது. ■



# கடவுளே ஒரு உதாரணம்...

**ஒரு பயிற்சியாளர் கூட்டத்தினை பார்த்து, 'நாட்டில் மிகவும் பணக்கார கோவில் எது?' ன்னு கேட்டார். எல்லாரும் ஒரே குரலில் திருப்பதி வெங்கடாசலபதின்னு கூறினார்கள்.**

**'ஏன் என்று பதில் தெரியுமா' ன்னு கேட்டார் பயிற்சியாளர். ஆளாளுக்கு ஒரு பதில் கூறினார்கள். அவுங்க பதில்ல திருப்தி அடையாத பயிற்சியாளர் கூறினார் :**

**'எத்தனையோ இடங்களில் பெருமாள் கோவில் உள்ளது. ஆனால், திருப்பதில மட்டும் தான் சாமி இரவு 12 மணி வரை பக்தர்களை பார்த்து ஆசீர்வதிக்கிறார். மீண்டும் காலையில் 3 மணிக்கு எழுந்து தரிசனம் தருகிறார், பகலில் ஓய்வு கூட எடுப்பதில்லை என்றார்.**

**மற்ற கோவில்களில் இரவு 9 மணிக்கு நடை சாத்துகிறார்கள் பகலில் ஓய்வு உண்டு. ஆகையால் கடுமையாக உழைத்தால் தான் செல்வம் பெருகும் என்பது கடவுளுக்கே பொருத்தும்போது நமக்கு பொருந்தாதா' என்று கேட்டார்.**



# மீண்டும் பட்டா மணல்

## நடவடிக்கை எடுக்குமா அரசு

**திருச்சி மாவட்டம் மற்றும் பல மணல் குவாரிகளில் கடந்த 12.9.2023 அன்று அமலாக்கத் துறையினால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் நீர்வளத்துறை இளநிலை பொறியாளர் ஆறுமுகம், உதவியாளர் சத்தியராஜ் ஆகியோரை அமலாக்கத் துறையினர் விசாரணைக்கு அழைத்து சென்றனர். மேலும் பல இடங்களில் நடத்திய சோதனை மூலமாக பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.**

மேலும் போலி மணல் சீட்டை வைத்தும் அரசு அங்கீகரித்ததை விட அதிக அளவில் மணல் ஏற்றியும் அரசுக்கு பல கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியதாக புதுக்கோட்டை ராமச்சந்திரன் திண்டுக்கல் ரத்தினம் மற்றும் கறம்பக்குடி கரிகாலன் ஆகிய மூவர் மீதும் வழக்கு பதியப்பட்டது. மேலும் பல மாவட்ட கலெக்டர் முதல் அரசு அதிகாரிகள் வரை இந்த வழக்கை சந்தித்தனர்.

இந்த நிலையில் புதுக்கோட்டை எஸ்.ஆர் குருப்பால் ஆட்சிக்கே சிக்கல் என்று மணல் ஒப்பந்தம் கொடுக்க கூடாது என்று தமிழக அரசு முடிவு எடுத்தது. ஆனாலும் எஸ்.ஆர் குருப் தரப்பினர் மீண்டும் மணல் ஒப்பந்த பணிகளை எடுத்தே ஆக வேண்டும் என்று அமைச்சர் துரைமுருகனிடம் நேரிடையாகவும் மறைமுகமாவும் பேசி பார்த்தனர். அவரும் ஒரு கட்டத்தில் முதல்வரிடம் பேசி பார்த்திருக்கிறார்.

முதல்வர் ஸ்டாலினோ, துரை முருகனிடமே சற்று கடுமை காட்டி அவர்களுக்காக இங்கே வராதீர்கள் என்று சொல்லிவிட்டார். இதனால் எஸ்.ஆர் தரப்புக்கு இருந்த ஒரு பிடியும் நழுவிப்போனது. அதானால் மாற்று முயற்ச்சி எடுப்பதற்காக சில மாதங்கள் அமைதி காத்து

வந்தனர்.

காத்திருந்தது வீண் போகவில்லை. நிழல் முதலமைச்சருக்கு மிக நெருங்கிய முக்கிய நபர் ஒருவரின் தொடர்பு எஸ்.ஆர் தரப்புக்கு கிடைத்தது. அவர் தான் மேலிடத்தில் பல ஆயிரம் கோடி சம்பாதிக்கலாம் அதற்கு நான் கியாரண்டி என்று சொன்னதன் மூலமாகத்தான் முருகனின் பெயர் கொண்ட அந்த நபர் மூலமாக மணல் ஒப்பந்தம் எஸ்.ஆர் தரப்புக்கு கிடைத்துள்ளது. அதுவும் எப்படி அரசு எந்த ஒரு உத்தரவையும் பட்டா மணலுக்கு பிறப்பிக்கவில்லை.

ஆனாலும் நிழல் முதல்வரின் அந்த நெருங்கிய நபர் மூலமாக, பட்டா மணலை திருட்டுத்தனமாக அள்ளுவதற்கு மாவட்டம் தோறும் ஆங்காங்கே திட்டத்தை தீட்டி வருகின்றனர். அதற்கான ஆட்களையும் நியமித்து விட்டதாக சொல்லப்படுகிறது. இதற்காக இந்த மணல் சம்பந்தபட்ட துறை அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் எஸ்.ஆர் தரப்புக்கு உதவிகள் செய்ய சொல்லி உடனடி உத்தரவையும் மேலிட தரப்பு பிறப்பித்து விட்டார்களாம்.

மணல் தேவைகள் தமிழ்நாடு முழுவதும் அதிக அளவில் உள்ளதை பயன்படுத்தி இப்படிப்பட்ட திருட்டுத்தனமான செயல்களை நிழல் முதல்வர் மூலமாக இத்தகைய திட்டத்தை தீட்டி வருகின்றனர். ஆற்றில் மணல் அள்ளினால் மீண்டும் அந்த ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து வரும் பொழுது மணல் தேங்கி மீண்டும் அந்த இடத்தில் மணல் குன்றுகள் சேரும். ஆனால் பட்டா இடங்களில் மணல் எடுக்கும் போது ஒரு தடவை அந்த இடத்தில் மணலை எடுத்து விட்டால் மீண்டும் மணல் அங்கு சேராது இதனால் நிலத்தடி நீர் வற்றியும் சிறுகுறி விவசாயிகளுக்கு பாசனத்திற்கு நீர் இல்லாமல் மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்படுவார்கள்.

இந்த சூழ்நிலை ஏற்பட்டால் வருகின்ற தேர்தலில் திமுக அரசுக்கு இவர்களால் மீண்டும் கெட்ட பெயர் தான் ஏற்படும் என்று நியாயமான சில அதிகாரிகள் மேலிடத்துக்கு எடுத்துரைத்தும் ஒரு பயனும் இல்லையாம்.

புதுக்கோட்டை எஸ்.ராமச்சந்திரன் மண் எடுக்கும் விவகாரம் இப்போது எதிர் கட்சியினருக்கும் தெரிந்துவிட்டது. அவர்களும் இப்போது இவர்கள் மணல் எடுப்பதன் மூலமாக பிரச்சனையை கிளப்ப ஆயுத்தமாகி வருகின்றனர்.

மேலிட நிழல் முதல்வருக்கு மாதம் ஒரு பெரிய தொகை தருகிறோம் என்றும் உறுதியளித்த இந்த புதுக்கோட்டை எஸ்.ஆர் குருப் மீண்டும் இந்த திருட்டு பட்டா மணலை எடுத்து அரசுக்கு மற்றும் விவசாயிகளுக்கும் பெரு இழப்பீடு ஏற்படுத்த தயாராகி வருகின்றனர். இதற்காக மாவட்டம் தோறும் காவேரி, கொள்ளிடம், வைகை, பாலாறு, தாமிரபரணி மற்றும் பல ஆறுகள் ஒரம் இருக்கும் பட்டா இடங்களின் உரிமையாளர்களை சந்தித்து ஆங்காங்கே அவர்களின் இன்சார்ஜ்களை அனுப்பியும் மணலுக்கு விலை பேசி வருகின்றனர். விரைவில் அந்தந்த பகுதிகளில் பூஜை போட்டு பணிகளை தொடங்க இருப்பதாகவும் தகவல்.

புதுக்கோட்டை சேர்ந்த எஸ்.ராமச்சந்திரன் மீண்டும் தமிழ்நாடு முழுவதும் பட்டா மணலை துவக்கினாலே எதிர் கட்சிகளுக்கு சாதகமாகத்தான் இருக்கும். இதனால் தேர்தல் சமயத்தில் மீண்டும் அமலாக்கத்துறை தமிழ்நாட்டில் கால் பதிக்க ஏதுவாக சூழ்நிலை உள்ளது. முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களுக்கு இத்தகைய செய்தி தெரிகிறதோ இல்லையோ, அடுத்த தடவை ஆட்சிக்கு திமுக வராது என்று தெரிந்ததால் என்னவோ, முருகனின் பெயர் கொண்டவரின் கல்லாப்பெட்டி மட்டும் நிரம்பி வழிந்து வருகிறதாம்.

நிழல் முதல்வரின் நெருங்கிய அந்த முருகன் பெயர் கொணடவரால் மணல் விவகாரத்தில் மட்டுமல்ல, பல வகையில் சிக்கல் ஏற்பட போகிறது என்று கிச்சன் தரப்பை சில அதிகாரிகள் அணுக இருப்பதாக கடைசி கட்ட தகவல். ■



# காமுகன்களான காவலர்கள்



**ஆந்திராவில் இருந்து திருவண்ணாமலை மார்க்கெட்டுக்கு மினிலாரியில் தக்காளி ஏற்றி வந்த இளம்பெண்ணை அவரது தாய் கண்னெதிரிலேயே 2 போலீஸ்காரர்கள் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

திருவண்ணாமலையில் மணலூர் பேட்டை செல்லும் ரோட்டில் மொத்த காய்கறி மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இந்த மார்க் கெட்டுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஆந்திராவில் இருந்தும் காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன. அதன்படி ஆந்திராவில் இருந்து தாயும், மகளும் தக்காளி பாரம் ஏற்றிக்கொண்டு மினி லாரியில் இரவு வந்துகொண்டிருந்தனர்.

நள்ளிரவு மினி லாரி, திருவண்ணாமலையில் உள்ள ஏந்தல் பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்தது. அப்போது அந்த பகுதியில் திருவண்ணாமலை கிழக்கு போலீஸ் நிலையத்தில் பணிபுரியும் போலீஸ்காரரர்கள் சுந்தர், சுரேஷ்ராஜ் ஆகிய இருவரும் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். காய்கறி ஏற்றி வந்த மினி லாரி இவர்கள் ரோந்து வந்த இடத்துக்கு வந்தபோது 2 போலீஸ்காரர்களும் அந்த மினி லாரியை நிறுத்தி எங்கு செல்கிறீர்கள் என. கேட்டு மறித்தனர்.

அப்போது அதில் வந்த தாயும், மகளும் காய்கறி மார்க்கெட்டுக்கு தக்காளி ஏற்றிச் செல்வதாக கூறியுள்ளனர். ஆனால் போலீஸ்காரரர்கள் அவர்களை கீழே இறங்கும்படி கூறினார். அப்போது தாயை மட்டும் விட்டுவிட்டு அவருடைய 18 வயது மகளை விசாரனை செய்ய வேண்டும் என கூறி தங்கள் மோட்டார் சைக்கிளில் உட்கார. வைத்துக்கொண்டு மறைவான இடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு அவர்கள் அந்த 18 வயது பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. இதனால் அந்த பெண்ணின் தாயார் கூச்சலிட்டார். உடனே அந்த பகுதியில் இருந்தவர்கள் அங்கு ஓடி வந்துள்ளனர். இதைப் பார்த்ததும் 18 வயது

பெண்ணை அங்கேயே விட்டுவிட்டு 2 போலீஸ்காரர்களும் தப்பிச் சென்று விட்டதாக கூறப்படுகிறது. பொதுமக்கள் அங்கு சென்று பார்த்தபோது அந்தப்பெண் மயங்கிய நிலையில் இருந்தார்.

அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு ஆஸ் பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இது பற்றிய தகவல் அறிந்ததும் திருவண்ணாமலை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுதாகர் மற்றும் போலீசார் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்று பாதிக்கப்பட்ட பெண்ணிடம் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது நடந்த சம்பவம் குறித்து அந்த பெண், போலீஸ் சூப்பிரண்டிடம் அழுதுகொண்டே கூறியுள்ளார். இந்த நிலையில் இளம்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த போலீஸ்காரர்கள் சுந்தர், சுரேஷ்ராஜ் ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் விசாரணை நடத்தி நீதிபதி முன் ஆஜர்படுத்தி காவலர் இருவரையும் சிறையில் அடைத்தனர்.

மேலும் வேலூரிலிருந்து திருவண்ணாமலைக்கு வந்த போலீஸ் டி.ஐ.ஜி.தர்மராஜ் சம்பவம் நடந்த இடத்திலும், ஆஸ்பத்திரியிலும் விசாரணை மேற்கொண்டார். ரோந்து சென்ற போலீஸ்காரர்களே இளம்பெண்ணை அதுவும் தாயுடன் வந்தவரை அவரது கண்ணெதிரி லேயே ஆள்நடமாட்டம் இல்லாத இடத்துக்கு அழைத்துச்சென்று பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

என்னதான் அரசும், உயர் அதிகாரிகளும் நாளுக்கொரு சட்டம் போட்டாலும், இது போன்ற சில கருப்பு ஆடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இதனால், காவல் துறையால் அரசுக்கும் அவப்பெயர். ■




கிராண்ட் பிக்சர்ஸ் தயாரிப்பில் புதுமுகம் ஆதித்ய மாதவன், கவுரி கிஷன், அஞ்சு குரியன் பிரதான வேடத்தில் நடித்திருக்கும் படம் 'அதர்ஸ்'. மெடிகல் கிரைம் த்ரில்லராக உருவாகியிருக்கும் இப்படத்தினை அறிமுக இயக்குனர் அபின் ஹரிஹரன் எழுதி இயக்கியுள்ளார். அரவிந்த் சிங் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்தினில், ஜிப்ரான் இசையமைப்பையும், ராமர் படத்தொகுப்பையும், பிரதீப் சண்டை காட்சிகளையும், சந்தோஷ் நடன அமைப்பையும் கையாண்டிருக்கின்றனர்.

இப்படத்தினில் முக்கிய கதபாத்திரங்களில் 'முண்டாசுபட்டி' ராமதாஸ், 'நண்டு' ஜகன், ஹரிஷ் பெரோடி, வினோத் சாகர், இயக்குனர் ஆர். சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகி நல்ல வரவேற்பினை பெற்றிருந்த நிலையில் தற்போது இப்படம் நவம்பர் 7ம் தேதியன்று வெளியாகவிருப்பதாக படக்குழு அறிவித்துள்ளது. ■

Owned and published by B.ANBALAGAN from G3, Bharath Park Apartment, Nethaji Road, Trichy - 620006
and Printed by K.MANOHARAN at Rajam Printers, No.88, White Betal Street, Big Bazar, Trichy - 620008
EDITOR : B.ANBALAGAN
Allrights reserved. Legal Jurisdictions Trichy city court only. Nothing in ARASIAL ANJAANENJAN is intented to defame any person. But expressed in good faith, pursuit and public good only.

# நடுப்பட்டி ஊராட்சி மன்றம்
## காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம்



**கடந்த 5 ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சிப் பணிகள் சாலை கட்டிடம்,பேவர் பிளாக், கான்கீரிட் சாலைகள் உள்ளிட்டவைகள்**

**மதிப்பீடு : 3 கோடியே 50 லட்சம்**

**இரா.செல்வராசு**
ஊராட்சி செயலாளர்

**S.பானுமதி**
தனி அலுவலர். வட்டாரவளர்ச்சி அலுவலர்
கிராம ஊராட்சிள் . காடையாம்பட்டி

ARASIYAL ANJAANENJAN TAMIL MONTHLY
REGISTERED WITH REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA
UNDER RNI NO : TN/TAM/2009/30650



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
தமிழ்நாடு அரசு

எல்லார்க்கும்
எல்லாம்

# நான்காண்டு சாதனைகள்
## 2021 - 2025



**ரூ.6.72 கோடி**
**மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள்**



அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
**ரூ.90.82 லட்சம் மதிப்பீட்டில் 13 பணிகள்**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
**ரூ.90.82 லட்சம் மதிப்பீட்டில் 13 பணிகள்**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
**ரூ.90.82 லட்சம் மதிப்பீட்டில் 13 பணிகள்**





சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்
**ரூ.46 லட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்
**ரூ.46 லட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்
**ரூ.46 லட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள்**





ஊரக வீடுகள் சீரமைத்தல்
**ரூ.29.75 லட்சம் மதிப்பீட்டில் 69 வீடுகள்**

ஊரக வீடுகள் சீரமைத்தல்
**ரூ.29.75 லட்சம் மதிப்பீட்டில் 69 வீடுகள்**

ஊரக வீடுகள் சீரமைத்தல்
**ரூ.29.75 லட்சம் மதிப்பீட்டில் 69 வீடுகள்**



**கணவாய்புதூர் ஊராட்சி, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம்**